بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 10

இதழ் 6

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1446 - ஷஅபான் 09 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 - தப்லீஃக் 06 ★ 06 பிப்ரவரி 2025


## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا النَّاسُ اعۡبُدُوۡا رَبَّكُمُ الَّذِىۡ خَلَقَكُمۡ وَالَّذِيۡنَ مِنۡ قَبۡلِكُمۡ لَعَلَّكُمۡ تَتَّقُوۡنَ

**பொருள்**

மக்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்களுடைய இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால் நீங்கள் எல்லாவித ஆபத்துகளிலிருந்தும் தவிர்ந்து கொள்ளலாம்

(அல்பக்கரா: 22)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

# அஹ்மதிய்யத்தின் தலைமையகம் காதியான் தாருல் அமானில் 129-வது ஆண்டு மாநாடு வெற்றிகரமாகவும் அருளுக்குரியதாகவும் நடந்து முடிந்தது

**ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் யூ.கே, இஸ்லாமாபாத்தில் இருந்து MTA மூலமாக ஈமானை வலுவூட்டக் கூடிய மாநாட்டு நிறைவுரையை நிகழ்த்தினார்கள்**

## காதியான் ஜல்ஸா 2024 அறிக்கை

### (பாகம் - 3)

### மூன்றாம் நாள் - ஞாயிற்றுக்கிழமை

டிசம்பர் 29, 2024

மதிப்பிற்குரிய நாஸிர் ஆஃலா ஸாஹிப் மற்றும் அமீர் ஜமாஅத் காதியான் அவர்கள் சரியாக காலை 10 மணிக்கு அஹ்மதிய்யத்தின் கொடியை ஏற்றினார்கள். மேலும் துஆ செய்தார்கள். மூன்றாவது நாளின் முதல் அமர்விற்கு மதிப்பிற்குரிய மவ்லானா முனீர் அஹ்மது காதிம் ஸாஹிப், அடிஷனல் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத், தென்னிந்தியா காதியான் அவர்கள் தலைமை தாங்கினார்கள். மதிப்பிற்குரிய ஹாஃபிழ் வகாஸ் ரிஷி ஸாஹிப் (மாணவர்,ஜாமிஆ அஹ்மதிய்யா காதியான்) திருக்குர்ஆன் திலாவத் செய்தார். மேலும், மதிப்பிற்குரிய மவ்லானா தாஹிர் அஹ்மது ஸாஹிப் தாரிக், நாயிப் நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மார்கஸிய்யா அவர்கள் அதன் மொழியாக்கத்தை வாசித்துக் காட்டினார்கள். மதிப்பிற்குரிய ஸாகிப் மஹ்மூத் ஸாஹிப், (மாணவர் ஜாமிஆ அஹ்மதிய்யா காதியான்) முஸ்தஃபா பர் தேரா பே ஹத் ஹோ ஸலாம் அவ் ரஹ்மத் என்று தொடங்கும் ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் கவிதை வரிகளை தனது அழகிய குரலில் பாடலாக பாடினார்.

கத்மே நுபுவ்வத் தொடர்பாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இஸ்லாமிய கொள்கை என்ற தலைப்பில் மவ்லவி மன்ஸூர் அஹ்மத் ஸாஹிப் மஸ்ரூர் (ஆசிரியர், பத்ர் வார இதழ் உருது பதிப்பு) அவர்கள் இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். சொற்பொழிவின் சுருக்கம் இதுவாகும். அதாவது, அஹ்மதி அல்லாதோர் தரப்பிலிருந்து அஹ்மதிகள் மீது எண்ணற்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. அவற்றில் மிகவும் வேதனையளிக்கக் கூடிய மற்றும் அடிப்படையற்ற குற்றச்சாட்டு இதுவாகும். அதாவது ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் மற்றும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தி (அலை) அவர்களும் அன்னாரின் ஜமாஅத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என்று ஒப்புக் கொள்வதில்லை என்ற இந்த குற்றச்சாட்டு ஆகும். இது எப்படிப்பட்ட ஒரு பொய்யான மற்றும் அடிப்படையற்ற குற்றச்சாட்டு என்றால், இது நமக்கு மிகவும் துன்பமும், வேதனையும் கொடுக்கின்றது. கூறினார்கள்: முதலில் நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவன் மீது ஆணையிட்டு அளித்த வாக்குமூலத்தை எடுத்துரைக்கின்றேன்: அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இறைவனின் கண்ணியம் மற்றும் கம்பீரத்தின் மீது ஆணையாக! நான் ஈமான் கொள்கின்றேன்; நமது தூதர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அனைத்து தூதர்களிலும் சிறந்தவரும், காத்தமுன் நபிய்யீனும் ஆவார்கள்.

(ஹமாமத்துல் புஷ்ரா, உருது மொழியாக்கம், பக்கம் 36)

மற்றோர் இடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இந்த இடத்தில் இதனையும் நினைவிற் கொள்ள வேண்டும்; நாங்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என்று நம்புவதில்லை என்று என் மீதும் எனது ஜமாஅத்தின் மீதும் பழி சுமத்தப்படுகின்றது. இது எங்கள் மீது சுமத்தப்படும் மாபெரும் அவதூறு ஆகும். நாங்கள் எந்த அளவிற்கு உறுதியான ஆற்றலுடனும், இறைஞானம் மற்றும் அகப்பார்வையுடனும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என்று நம்புகிறோமோ மேலும் உறுதி கொள்கிறோமோ அதன் லட்சத்தில் ஒரு பங்கு கூட மற்றவர்கள் நம்பிக்கை கொள்வதில்லை. மேலும் அவர்களுக்கு அதற்கான தகுதியும் இல்லை.ஏனெனில், காத்தமுல் அன்பியாவின் கத்மே நுபுவ்வதில் இருக்கின்ற அந்த உண்மைத்துவம் மற்றும் இரகசியத்தை அவர்கள் புரிவதே இல்லை. அவர்கள் தங்களது மூதாதையர்களிடமிருந்து ஒரு சொல்லை செவிமடுத்துள்ளனர். ஆனால், அவர்கள் அதன் உண்மைத்துவத்தை அறிவதில்லை. மேலும் கத்மே நுபுவ்வத் என்றால் என்ன? மேலும் அதன் மீது ஈமான் கொள்வதன் பொருள் என்ன? என்பதை அவர்கள் அறிவதில்லை. ஆனால், நாங்கள் முழுமையான அகப்பார்வையுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீன் ஆவார்கள் என்று நம்புகிறோம். மேலும், இறைவன் எமக்கு கத்மே நுபுவ்வத்தின் உண்மைத்துவத்தை எப்படிப்பட்ட வகையில் திறந்து கொடுத்துள்ளான் என்றால், எமக்கு பருகுவதற்கு கொடுக்கப்பட்டுள்ள அந்த இறைஞானத்தின் பானத்திலிருந்து ஒரு சிறப்பான இன்பத்தை நாம் பெறுகின்றோம். அதனை இந்த நீரூற்றிலிருந்து தாகத்தை தணித்துக் கொண்டவரைத் தவிர வேறு எவராலும் அனுமானிக்க முடியாது.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 27, காதியான் பதிப்பு 2003)

கூறினார்கள்: ஆக, எந்த உறுதியுடனும், அகப்பார்வையுடனும் மஸீஹ் மவ்வூத் (அலை) மற்றும் அன்னாரின் ஜமாஅத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீன் என்று ஒப்புக் கொள்கின்றதோ அதில் லட்சத்தில் ஒரு பங்கு கூட நாங்கள் கத்மே நுபுவ்வத்தின் பாதுகாவலர் என்று தங்களை கூறிக் கொள்ளக் கூடியவர்கள் நம்புவதில்லை.

உம்மத்தீ நபி வருவதற்கான வாசல் அடைக்கப்படவில்லை என்பதை சொற்பொழிவாளர் திருக்குர்ஆனின் வசனங்களிலிருந்தும், நபிமொழிகளிலிருந்தும் சான்றுகளை எடுத்துரைத்தார். மேலும், இது தொடர்பாக சமுதாய அறிஞர்களின் ஆதாரங்களையும் எடுத்து வைத்தார்கள். கத்மே நுபுவத்தின் உண்மைத்துவம் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்)

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஸரிய்யா ஸைது ஸைது பின் ஹாரிஸா & ஸரிய்யா வாதியுல் குரா & ஸரிய்யா அப்துர் ரஹ்மான் பின் அஃப் & ஸரிய்யா அலீ பின் அபீ தாலிப் & ஸரிய்யா ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) போன்ற போர் நடவடிக்கைகளின் காரணிகள் மற்றும் சம்பவங்களைக் குறித்த விளக்கம்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**
இப்னு அவ்ஃபே! இந்த கொடியை வாங்கிக் கொள்ளுங்கள்; நீங்கள் அனைவரும் இறைவழியில் ஜிஹாதுக்காக புறப்படுங்கள்; காஃபிர்களுடன் போரிடுங்கள்; ஆனால், ஒருபோதும் மோசடி செய்யக் கூடாது; உடன்படிக்கையை முறிக்கக் கூடாது; எதிரிகளின் சடலங்களை சிதைக்கக் கூடாது; குழந்தைகளை கொலை செய்யக் கூடாது. இது இறைவனுடைய கட்டளையாகும் ; அவனுடைய நபி உடைய வழிமுறையாகும்

நாடு பிரிக்கப்பட்ட போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப 313 தர்வேஷ்கள் காதியானில் குடியிருந்தார்கள். மதிப்பிற்குரிய தய்யப் அலீ ஸாஹிப் அவர்கள் அந்த தர்வேஷ்களில் இறுதியாக மரணமடைந்தது இவர்கள் ஆவார்கள். இப்பொழுது காதியானில் இனி வேறு எந்த தர்வேஷும் இல்லை. காதியானுடைய இந்த மாநாடு எந்த ஒரு தர்வேஷும் இல்லாமல் நடக்கின்ற முதல் மாநாடு ஆகும். இன்றிலிருந்து மாநாடு ஆரம்பிக்கின்றது.இப்போது காதியானில் இருக்கக் கூடிய புதிய தலைமுறையினரின் பொறுப்பு என்னவென்றால், தியாகங்கள் செய்து வந்த தமது சான்றோர்களின் மரபுகளை நிலைநாட்டியவாறு நன்றி உணர்வோடும், கலப்பற்றத் தன்மையோடும் காதியானில் தமது வாழ்வை கழிக்க வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு இதற்கான நற்பேறையும் வழங்குவானாக!

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 27 டிசம்பர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 140**3** ஆண்டு **ஃபத்ஹ்** மாத**ம் 27 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இன்றும் நான் சில போர் நடவடிக்கைகளின் குறிப்பை எடுத்துக் கூறுவேன். ஸைது பின் ஹாரிஸா என்று அழைக்கப்பட்ட ஒரு போர் நடவடிக்கை பற்றி வரலாற்றில் குறிப்பு காணப்படுகிறது. இந்த போர் நடவடிக்கை ஜமாதல் ஆகிரா மாதம், ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு பனூ ஜுஸாம் கோத்திரத்துடன் ஹிஸ்மா என்ற இடத்தில் நிகழ்ந்தது. ஹிஸ்மா என்பது பனூ ஜுஸாமுடைய ஒரு நகரமாகும். மதீனாவில் இருந்து 8 இரவு பயணத் தொலைவில் இருந்தது. அந்த காலத்து பயண முறையின் அடிப்படையில் இந்த பயணம் நீண்ட பயணமாக இருந்தது.

அல்லாமா இப்னு கய்யிம் அவர்கள் ஸாதுல் மஆது என்ற நூலில் கூறியிருப்பதாவது ; இந்தப் போர் நடவடிக்கை சந்தேகத்திற்கிடமின்றி ஹுதைபியா சமாதானத்திற்கு பிறகு நடந்ததாகும். அதாவது ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டில். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களும் பல்வேறு வரலாற்று நூல்களில் இருந்து எடுத்துரைத்தவாறு இதைப் பற்றி விவரித்துள்ளார்கள். அன்னார் (ரலி) கூறுகிறார்கள்:

இந்தப் போர் நடவடிக்கை நிகழ்ந்த காலத்தை பற்றி ஒரு சிக்கல் உள்ளது. அதை பற்றி எடுத்துரைப்பது அவசியமாகும். இப்னு ஸஅது மற்றும் அவர்களை பின்பற்றி மற்ற வரலாற்று ஆசிரியர்கள் இந்த போர் நடவடிக்கை நிகழ்ந்த காலமாக ஜமாதல் ஆகிரா ஹிஜ்ரீ 6-ம் ஆண்டு என்று எழுதியிருக்கின்றார்கள். இதுதான் சரி என்று கருதப்படுகின்றது. ஆனால், அல்லாமா இப்னு கய்யிம் அவர்கள் ஸாதுல் மஆது என்ற நூலில் விளக்கமளிக்கும் போது, இந்த போர் நடவடிக்கை ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டில் ஹுதைபியா உடன்படிக்கைக்குப் பிறகு நிகழ்ந்ததாகும் என்று எழுதியிருக்கின்றார்கள். அநேகமாக இப்னு கய்யிம் அவர்களின் கூற்றின் அடிப்படையில் இந்த போர் நடவடிக்கைக்கான காரணம், திஹ்யா கல்பீ என்பவர் கைஸர் மன்னரை சந்தித்து விட்டு மதீனாவிற்கு திரும்பிக் கொண்டிருந்தார். வழியில் பனூ ஜுஸாம் கோத்திரத்தினர் அவரிடம் கொள்ளை அடித்தனர்; பெருமானார் (ஸல்) அவர்கள் திஹ்யா கல்பீயிடம், கைஸர் மன்னருக்கு கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தது ஹுதைபியா சமாதானத்திற்குப் பிறகு என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயம் ஆகும். ஆகவே இந்த சம்பவம் எவ்வகையிலும் ஹுதைபியா சமாதான உடன்படிக்கைக்கு முன்பு நிகழ்ந்திருக்க முடியாது. இந்த சான்று நம்மை பொறுத்த வரை முற்றிலும் தெளிவானதாகவும், வெளிப்படையானதாகவும் உள்ளது. இந்த அடிப்படையில் பார்க்கும்போது இப்னு ஸஅது அவர்களின் அறிவிப்பு நிச்சயமாக மறுக்க தகுந்ததாக ஆகிவிடுகிறது. ஆனால், இந்த எளியவனுடைய கருத்து என்னவென்றால், இன்னொரு காரணம் உள்ளது. அதை அல்லாமா இப்னு கய்யிம் அவர்கள் கண்டுகொள்ளாமல் விட்டு விட்டார்கள். அது என்னவென்றால், கைஸர் மன்னரை சந்திப்பதற்காக திஹ்யா கல்பீ சிரியாவுக்கு இருமுறை சென்றிருக்கவும் வாய்ப்பு உள்ளது. அதாவது ஹுதைபியா சமாதான உடன்படிக்கைக்கு முன்பு வியாபார நோக்கத்திற்காக முதல் முறையாக சென்றிருக்கலாம். அப்பொழுது கைஸர் மன்னரையும் சந்தித்திருக்கலாம். இரண்டாவது முறையாக ஹுதைபியா சமாதான உடன்படிக்கைக்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் கடிதத்தைக் கொண்டு சென்றிருக்கலாம். அவர் முன்பும் கைஸரை சந்தித்திருந்ததன் காரணமாகவே பெருமானார் (ஸல்) அவர்கள் அவரை கைஸர் மன்னரை நோக்கி தூதுவராக அனுப்ப தீர்மானித்திருக்கலாம்.

பின்வரும் விஷயமும் இந்த காரணத்திற்கு வலு சேர்க்கின்றது. அது என்னவென்றால், அந்த பயணத்தில் திஹ்யா கல்பீ அவர்களிடம் வியாபார பொருட்கள் இருந்தன என்று இப்னு இஸ்ஹாக் எழுதியிருக்கிறார்கள்: ஹுதைபியா சமாதான உடன்படிக்கைக்கு பிறகுள்ள பயணத்தில் வியாபார பொருட்களுடன் எந்த தொடர்பும் இருப்பதாக தெரியவில்லை. இன்னொரு விஷயத்திற்கும் வாய்ப்புள்ளது. அது என்னவென்றால், திஹ்யா கல்பீ அவர்களின் இப்பயணம் வியாபார நோக்கத்திற்காக மட்டுமே இருந்திருக்கலாம். ஆனால், இப்னு ஸஅது அவர்களின் அறிவிப்பாளர் திஹ்யா கல்பீ அவர்களின் இன்னொரு பயணத்துடன் இந்த பயணத்தை கலந்து கைஸரை சந்தித்தது; ஆடை பரிசாக கிடைத்தது ஆகியவற்றை அனுமானமாக இணைத்திருக்கவும் வாய்ப்புள்ளது. அல்லாஹ்வே நன்கறிவான்.


இந்தப் போர் நடவடிக்கையின் குதிரைகள், சம்பவங்கள் ஆகியவற்றை குறித்து மேற்கொண்டு இவ்வாறு விவரம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இப்னு இஸ்ஹாக் கூறுகிறார்கள்: ரிஃபா பின் ஸைது ஜுஸாமீ என்பவர் தன் சமுதாயத்தினரிடம் பெருமானார் (ஸல்) அவர்களின் கடிதத்தை கொண்டு வந்தார். அன்னார் (ஸல்) அந்த மக்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுத்திருந்தார்கள். அந்த மக்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அந்த காலகட்டத்தில்தான் ஹஸ்ரத் திஹ்யா பின் கல்பீ (ரலி) அவர்கள் ரோமானிய பேரரசனான கைஸரிடம் சென்று திரும்பிக் கொண்டிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களை ரோமானிய கைஸர் மன்னனிடம் அனுப்பி இருந்தார்கள். கைஸர் இவர்களுக்கு அன்பளிப்புகளை

கொடுத்திருந்தார். அங்கி அணிவித்திருந்தார். ஹுனைத் பின் அவ்ஸ் மற்றும் அவனுடைய மகன் அவ்ஸ் பின் ஹுனைது ஆகியோர் இவர்களை வழியில் சந்தித்தனர். இப்னு ஸஅத் அவர்களைப் பொறுத்தவரை, ஹுனைத் பின் ஆரிஸ் மற்றும் ஆரிஸ் பின் ஹுனைத் கலையீ ஆகியோர் ஆவார்கள். சுலைஃ என்பது பனூ ஜுஸாம் உடைய ஒரு கிளைக் கோத்திரம் ஆகும். அந்த இருவரும் திஹ்யா கல்பீ மீது தாக்குதல் நடத்தி அவர்களிடம் இருந்த எல்லா பொருட்களையும் பிடுங்கிக் கொண்டார். அவர்களிடம் ஒரு பழைய ஆடையைத் தவிர எதையும் விட்டு வைக்கவில்லை. இந்த செய்தி ரிஃபா பின் ஸைது இன் கோத்திரமான பனூ ஸுபைபிற்கு கிடைத்தது. இந்தக் கோத்திரம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தது. அந்த சமுதாயத்து மக்கள் ஹுனைன் மற்றும் அவனுடைய மகனை நோக்கி புறப்பட்டார்கள். அவர்கள் அந்த இருவருடன் சண்டையிட்டு ஹஸ்ரத் திஹ்யா கல்பீ (ரலி) அவர்களின் செல்வத்தை விடுவித்துக் கொண்டு வந்தனர். ஹஸ்ரத் திஹ்யா கல்பீ (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். அன்னாரிடம் தமக்கு நேர்ந்த சம்பவத்தை எடுத்துரைத்தார்கள். ஹுனைன் மற்றும் அவனுடைய மகனை பழிவாங்க வேண்டும் என்று விண்ணப்பம் வைத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களுக்கு 500 வீரர்களை கொடுத்து அனுப்பினார்கள். திஹ்யா கல்பீ அவர்களையும் படையுடன் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் இரவில் பயணம் செய்வார்கள்; பகலில் மறைந்து கொள்வார்கள். அவர்களுடன் பனூ உஸ்ரா உடைய ஒரு வழிகாட்டியும் இருந்தார். அங்கு பனூ ஜுஸாமுடைய சில கோத்திரங்கள் ஒன்று சேர்ந்து விட்டன. அவற்றுள் கத்ஃபான் கோத்திரம் முழுவதுமாக இருந்தது. வாயில் எனும் கோத்திரத்திலிருந்து சிலரும் இருந்தார்கள். ரிஃபா பின் ஸைது அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் கடிதத்தை தம் சமுதாயத்தினரிடம் கொண்டு வந்த போது அந்த மக்கள் ஹர்ரதுல் ரஜ்லா எனுமிடத்தில் இருந்தார்கள். ஹர்ரதுல் ரஜ்லா என்பது ஜுஸாம் பகுதியில் இருந்த கருப்பு பாறை நிலப்பிரதேசம் ஆகும். ரிஃபா அவர்களோ குரா ரப்வா எனுமிடத்தில் இருந்தார்கள். குரா ரப்வாவைக் குறித்து எழுதப்பட்டுள்ளதாவது: அது பனூ ஜுஸாம் பகுதியின் ஓர் இடமாக இருந்தது.

ரிஃபா அவர்கள் இந்த சம்பவத்தை பற்றி எதுவும் அறிந்திருக்கவில்லை. பனூ உஸ்ராவைச் சேர்ந்த வழிகாட்டி ஹஸ்ரத் ஸைது மற்றும் அவர்களின் தோழர்களை காலை நேரத்தில் ஹுனைத், அவனுடைய மகன் மற்றும் அம்மக்கள் இருந்த குடியிருப்பு பகுதிக்கு திடீரென்று கொண்டு சேர்த்தார். ஸஹாபிகள் அந்த மக்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை கொலை செய்தார்கள். கடும் போர் நடைபெற்றது. ஹுனைத் மற்றும் அவனுடைய மகனை கொன்றார்கள். அந்த மக்களுடைய கால்நடைகள், ஒட்டகங்கள், பெண்கள் ஆகியவற்றை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். ஓராயிரம் ஒட்டகங்களும், 5000 ஆடுகளும் இருந்தன. பெண்கள் மற்றும் குழந்தைகளில் 100 பேர் கைதிகளாக ஆக்கப்பட்டு இருந்தார்கள்.

இந்த தாக்குதலுக்குப் பிறகு ஜுஸாம் கோத்திரத்தின் கிளை கோத்திரமான பனூ ஸுபைப் மதீனா வந்தது பற்றிய குறிப்பு காணப்படுகிறது. ஸைது அவர்கள் அப்போது மதீனா வந்தடைந்திருக்கவில்லை. அப்போது பனூ ஸுபைப் கோத்திரத்தைச் சார்ந்த மக்கள் - இவர்கள் பனூ ஜுஸாமுடைய கிளை கோத்திரமாக இருந்தார்கள் - இவர்களுக்கு இந்த போர் செய்தி கிடைத்திருந்தது. அவர்கள் தம் தலைவரான ரிஃபா பின் ஸைது அவர்களுடன் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜர் ஆனார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்களோ முஸ்லிமாகி விட்டோம். எங்கள் சமுதாயத்தில் மீதம் உள்ளவர்களுக்காக பாதுகாப்பு ஒப்பந்தம் எழுதப்பட்டு விட்டது. எவர்கள் முஸ்லிம்களாக ஆகி இருக்கவில்லையோ அவர்களுக்கும் புகலிடம் கொடுத்து எழுதப்பட்டது. ஆனால், தங்களால் அனுப்பப்பட்டிருந்த படை தாக்குதல் நடத்தி அவர்களுள் சிலரை கொன்று விட்டனர்; சிலரை கைதியாக ஆக்கி விட்டனர். போர் செல்வங்களை கைப்பற்றி இருக்கிறார்கள். நாங்களோ முஸ்லிம்களாக ஆகிவிட்டோம் ; எவர்கள் முஸ்லிம்களாக ஆகவில்லையோ அவர்களுக்கு பாதுகாப்பு தருவதாக எழுதப்பட்டு விட்டது. அவ்வாறிருக்கும் போது எங்கள் கோத்திரத்தின் மீது ஏன் தாக்குதல் நடத்தப்பட்டது? என்று கேட்டார்கள். இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் நீங்கள் கூறுவது சரிதான் என்றார்கள்.

அன்னார் (ஸல்) எந்த சான்றையும் எடுத்துரைக்கவில்லை. நீங்கள் சரியாகத்தான் கூறுகிறீர்கள்; ஆனால் ஸைதுக்கு இது பற்றி தெரியாது என்றார்கள். பிறகு, எந்த மக்கள் கொல்லப்பட்டிருந்தார்களோ அவர்களுக்காக பலமுறை அன்னார் வருத்தம் தெரிவித்தார்கள். அப்போது ரிஃபாவுடைய ஒரு தோழரான அபூ ஸைது என்பவர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, எவர்கள் கொல்லப்பட்டு விட்டார்களோ அவர்கள் விஷயத்தில் நாங்கள் எதையும் வேண்டவில்லை. தப்பெண்ணத்தின் காரணமாக இந்த விபத்து நிகழ்ந்துவிட்டது. ஆனால், எவர்கள் உயிருடன் இருக்கிறார்களோ, எந்த பொருட்களை ஸைது அவர்கள் எங்களுடைய கோத்திரத்திடமிருந்து கைப்பற்றி இருக்கிறார்களோ அவை எங்களுக்கு திரும்ப கிடைக்க வேண்டும் என்றார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் நீங்கள் கூறுவது முற்றிலும் சரியே என்றார்கள். ஆயிரக்கணக்கான ஆடுகளும், ஒட்டகங்களும், பொருட்களும், நூறு கைதிகளும் இருந்தார்கள். அன்னார் (ஸல்) உடனடியாக ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை ஸைது அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். அடையாளமாக அவர்களுக்கு தம் வாளை கொடுத்தனுப்பினார்கள். இந்த கோத்திரத்தைச் சார்ந்த கைதிகளையும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட செல்வங்களையும் விடுவிக்குமாறு கூறி அனுப்பினார்கள். கட்டளை கிடைத்த உடனே ஸைது அவர்கள் உடனடியாக எல்லா கைதிகளையும் விட்டு விட்டார்கள். போர் செல்வங்களையும் திரும்பக் கொடுத்து விட்டார்கள். எண்ணற்ற செல்வம் இருந்தது.




போர் செல்வங்களை ஒன்று சேர்ப்பதற்காக தாக்குதல் நடத்தி வந்தார்கள் என்று (முஸ்லிம்களைப் பற்றி) இவ்வாறு ஆட்சேபனை செய்யப்படுவதுண்டு. இச்சம்பவம் எவ்வாறான உதாரணம் என்றால், இதிலிருந்து இஸ்லாம் நிலை நாட்ட விரும்புகின்ற தரத்தை நாம் அறிய முடிகின்றது. தற்காலத்தில் முஸ்லிம்களும் கூட (பிற) முஸ்லிம்களின் மீது பகைமையின் காரணமாக ஒருவர் மற்றவரை கொலை செய்கிறார்கள். ஆனால், ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த மக்களுடன் இந்த அளவு அழகான முறையில் நடந்து கொள்ளப்பட்டது.

பிறகு, ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் இன்னொரு போர் நடவடிக்கை பற்றிய குறிப்பும் காணப்படுகிறது. இந்த போர் நடவடிக்கை வாதியல் குரா எனுமிடத்தில் ரஜப் மாதம் ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு நிகழ்ந்தது. ஹிஸ்மா என்ற இடத்தில் நடந்த போருக்கு பிறகு ஏறக்குறைய ஒரு மாதம் கழித்து பெருமானார் (ஸல்) அவர்கள் ஸைது பின் ஹாரிஸா அவர்களை வாதியல் குராவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். வாதியல் குராவை குறித்து எழுதப்பட்டுள்ளதாவது: இது மதீனாவின் வடக்கு பகுதியில் சிரியா செல்லும் திசையில் சுமார் 350 கி.மீ தொலைவில் இருந்தது. இந்த இடத்தில் மஸ்ஹஜ் மற்றும் குஸா கோத்திரத்தைச் சார்ந்த மக்கள் இருந்தார்கள் என்று ஓர் அறிவிப்பில் வருகிறது. முஸர் கோத்திரத்தின் சில குடும்பங்கள் அங்கு இருந்தன என்றும் ஆனால் இங்கு போருக்கான சூழ்நிலை அமையவில்லை என்றும் கூறப்படுகின்றது.

ஆனால், இப்னு ஹிஷாம் அவர்களோ, வாதியல் குராவில் பனூ ஃபஸரா மக்களை ஸஹாபிகள் எதிர் கொண்டார்கள் என்றும், பல ஸஹாபிகள் ஷஹீது ஆனார்கள் என்றும், ஸைது அவர்கள் கடும் காயம் அடைந்தார்கள்; ஆனால், இறைவன் அவர்களை காப்பாற்றி விட்டான் என்றும் எடுத்துரைத்துள்ளார்கள்.

ஸீரத் காத்தமுன் நபிய்யீன் எனும் நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்களும் போர் நடைபெற்றது என்று இதைத்தான் எடுத்துரைத்துள்ளார்கள்.

பிறகு அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் எனும் ஒரு போர் நடவடிக்கையை பற்றிய குறிப்பு காணப்படுகிறது. இந்த போர் நடவடிக்கை ஷஃஅபான் மாதம் ஹிஜ்ரீ ஆறாம் வருடம் தூமத்துல் ஜந்தல் எனுமிடத்தில் நிகழ்ந்தது. தூமத்துல் ஜந்தல் என்பது மதீனாவின் வடதிசையில் சிரியாவின் எல்லைப் பகுதிக்கு அருகில் உள்ள இடமாகும். மதீனாவில் இருந்து ஏறக்குறைய 450 கி.மீ தூரத்தில் இது உள்ளது. இப்னு இஸ்ஹாக் மற்றும் முஹம்மத் பின் உமர் ஆகியோர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் பின் கத்தாப் அவர்களிடம் இருந்து அறிவிக்கிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களை அழைத்து, நீங்கள் ஆயத்தமாகுங்கள் ; நான் உங்களை இன்றோ அல்லது நாளையோ ஒரு போருக்கு அனுப்பி வைக்கப் போகிறேன் இன்ஷா அல்லாஹ் என்று கூறினார்கள். இதன் விபரத்தை ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதி இருக்கின்றார்கள்:

இந்த போருக்கான ஆயத்தம் குறித்தும், (அதற்காக) புறப்பட்டதை குறித்தும் இப்னு இஸ்ஹாக் அவர்கள் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடமிருந்து ஒரு

சுவாரஸ்யமான அறிவிப்பை எடுத்துரைக்கின்றார்கள்: அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை எங்களுள் சிலர் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் அமர்ந்து இருந்தோம். ஹஸ்ரத் அபூபக்ர், உமர், உஸ்மான், அலி மற்றும் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ஆகியோரும் இருந்தார்கள். அன்ஸாரி இளைஞர் ஒருவர் ஆஜராகி, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நம்பிக்கை கொண்டவர்களில் அனைவரையும் விட சிறந்தவர் யார் ?என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் நற்பண்புகளில் எவர் அனைவரையும் விட சிறந்தவராக இருப்பாரோ அவரே ஆவார் என்று கூறினார்கள். அதாவது, நம்பிக்கை கொண்டோருடைய அடையாளம் என்னவென்றால் எவருடைய ஒழுக்கங்கள் மேலானதாக இருக்குமோ அவரே சிறந்தவராவார்.

அந்த சபைகளில் பொதுவான விஷயங்களும் பேசப்பட்டு வந்தன; ஸரிய்யா எனும் போர் நடவடிக்கைகளைப் பற்றிய போர்களை பற்றியும் பேச்சுகளும் இருந்தன. சில அறிவுரைகளும் அதில் கூறப்பட்டன. அவை நமக்கு மிகவும் அவசியமானதாக உள்ளன. பெருமானார் (ஸல்) கூறினார்கள்: எவர் நற்பண்புகளில் அனைவரையும் விட சிறந்தவராக இருப்பாரோ அவரே மிகச் சிறந்தவர் ஆவார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அனைவரையும் விட அதிக இறையச்சம் கொண்டவர் யார்? என்று அந்த இளைஞர் கேட்டார். எவர் மரணத்தை அதிகமாக நினைவு கூர்கிறாரோ, அதற்காக முன்பே ஆயத்தமாகிறாரோ அவர் தான் என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

ஆயத்தம் என்பது என்னவென்றால் அல்லாஹ்வின அச்சம் இருக்க வேண்டும்; அவனுடைய உரிமையை செலுத்த வேண்டும் ; அவனுடைய கட்டளைகளின்படி செயல்பட வேண்டும். இதுதான் மரணத்திற்காக ஆயத்தமாகுதல் ஆகும்.

அப்போது அந்த அன்ஸாரி இளைஞர் மவுனமாகிவிட்டார். பெருமானார் (ஸல்) அவர்கள் எங்கள் பக்கம் திரும்பி, முஹாஜிர்களின் கூட்டமே! என்று கூறி சிறிது அறிவுரை வழங்கினார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்: ஐந்து தீமைகள் எவ்வாறானவை என்றால், அதைக் குறித்து நான் இறைவனிடம் பாதுகாப்பு தேடுகிறேன். அவை ஒருபோதும் என் சமுதாயத்தில் உருவாகி விடக் கூடாது என்று நான் பாதுகாப்பு தேடுகிறேன். ஏனெனில், அது எந்த சமுதாயத்தில் தோன்றுமோ அந்த சமுதாயத்தை அழித்து நாசம் செய்து விடும்.

முதல் விஷயம் என்னவென்றால், எந்தவொரு சமுதாயமும் விபச்சாரம் மற்றும் வெட்கக்கேடான செயல்களை பகிரங்கமாக செய்யாத வரை அவர்களுக்கு முன்பிருந்த மக்களிடம் இல்லாத நோய்களும், தொற்று நோய்களும் அவர்களிடத்தில் வெளிப்பட ஆரம்பிக்காது.

தற்காலத்தில் இதை நாம் உலகில் பொதுவாக காண்கிறோம். பெருமானார் (ஸல்) அவர்கள் இதிலிருந்து பாதுகாப்பு வேண்டியுள்ளார்கள்.

இரண்டாவது விஷயம், எந்த ஒரு சமுதாயமும் அளந்து கொடுப்பதிலும், நிறுத்து கொடுப்பதிலும் மோசடி செய்யாத வரை அந்த சமுதாயத்தில் பஞ்சமும், கடின உழைப்பும், கடுமையும் அரசனின் கொடுமையும் இறங்க ஆரம்பிக்காது.

இதன் பக்கமும் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. இந்த மோசடியும் முஸ்லிம்களிடத்தில் அதிகமாக பரவி விட்டது. அந்தோ! அவர்கள் இதை புரிய வேண்டும். அஹ்மதிகள் குறிப்பாக இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

மூன்றாவது விஷயம், எந்த ஒரு சமுதாயமும் ஸகாத் மற்றும் ஸதக்கா செலுத்துவதில் சோம்பேறித்தனத்தையும், கவனமின்மையையும் வெளிப்படுத்தாத வரை அவர்களிடம் மழை வளம் குறைவதில்லை. எந்த அளவுக்கென்றால், இறைவனுக்கு தன்னுடைய படைப்பினமான கால்நடைகள் மற்றும் விலங்குகளை பற்றி அக்கறை இல்லாதிருக்கும் என்றால் இவ்வாறான சமுதாயத்தின் மேல் மழை பெய்வதை முற்றிலும் நிறுத்தி இருப்பான்.

இதுவும் அல்லாஹ்வுடைய தண்டனையின் அடையாளமாகும். இதிலிருந்தும் பாதுகாப்பு தேட வேண்டும். நீங்களும் பாதுகாப்பு தேடுங்கள்; நானும் பாதுகாப்பு தேடுகிறேன் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

நான்காவது விஷயம், எந்த ஒரு சமுதாயமும் இறைவன் மற்றும் அவனுடைய தூதரிடம் செய்து கொண்டே உறுதிமொழியை மீறாத வரை அவர்கள் மீது அந்நிய சமுதாயத்தைச் சேர்ந்த எதிரிகளால் ஆதிக்கம் செலுத்த முடியாது. அந்த எதிரிகள் அவர்களின் உரிமைகளை பறித்து விடுவார்கள்.

தற்காலத்தில் முஸ்லிம்களுடைய நிலையை பார்க்கும் போது அவர்கள் தம் ஒப்பந்தங்களை முறிக்கிறார்கள் என்பது அதிலிருந்து வெளிப்படுகின்றது. அல்லாஹ் கருணை காட்டுவானாக! அவர்களுக்கு அறிவை வழங்குவானாக!

ஐந்தாவது விஷயம், எந்த ஒரு சமுதாயத்தின் ஆலிம்களும், தலைவர்களும் ஷரீஅத்திற்கு மாற்றமாக மார்க்கத் தீர்ப்பு கொடுத்து ஷரீஅத்தை தம் விருப்பத்திற்கு ஏற்ப சீர்குலைக்காத வரை அவர்களிடத்தில் உட்பூசல்களும் சண்டைகளும் ஆரம்பிக்காது.

இதுவும் முஸ்லிம்களிடத்தில் தற்போது பிரிவினை வாதமாக பொதுவாக தென்படுகிறது. பெருமானார் (ஸல்) அவர்கள் எந்த விஷயங்களில் இருந்து பாதுகாப்பு கேட்டார்களோ அதுவே தற்போது முஸ்லிம்களிடத்தில் நமக்கு தென்படுகிறது. அல்லாஹ் கருணை காட்டுவானாக! அவர்களுக்கு அறிவை வழங்குவானாக! சமுதாயங்களின் முன்னேற்றம் மற்றும் வீழ்ச்சிக்கான காரணத்தை குறித்து அன்னார் (ஸல்) வழங்கிய பொன்னான அறிவுரையாக இது உள்ளது. முஸ்லிம்கள் விரும்பினால் அவர்களுக்கு இது தற்காலத்திலும் ஒரு சிறந்த பாடமாக இருப்பது தெரிய வரும். அந்தோ!, முஸ்லிம்கள் இது பற்றி சிந்திக்க வேண்டுமே!

இந்தப் போரின் சூழ்நிலைகள் மற்றும் சம்பவங்களை குறித்து ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களிடம், இரவில் தூமத்துல் ஜந்தலை நோக்கி புறப்படுமாறு கட்டளையிட்டார்கள். அவர்களின் படை ஜுரூஃப் என்ற இடத்தில் முகாமிட்டிருந்தது. அவர்கள் 700 பேர் இருந்தார்கள். ஜுரூஃப் என்பது மதீனாவில் இருந்து மூன்று மைல் வட திசையில் இருக்கக் கூடிய ஓர் இடமாகும். இந்தப் போர் நடவடிக்கையை குறித்து ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:


Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT

89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9


இப்பொழுது இஸ்லாமிய தாக்கம் மிக வேகமாக விரிவடைந்து கொண்டே சென்றது. அரேபியாவின் தொலைதூர பகுதிகள் வரை இஸ்லாத்தின் தப்லீஃக் சென்றடைந்து கொண்டிருந்தது. ஆனால், அத்துடனே தொலைதூர பகுதிகளிலும் எதிர்ப்பு அதிகரித்துக் கொண்டிருந்தது. எவர்களெல்லாம் இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டு இருந்தார்களோ அவர்களுக்கு தம்முடைய கோத்திரத்தார்கள் சார்பாக கடும் துன்பங்களை சகித்துக் கொள்ள நேர்ந்தது; அந்த கொடுமைகளை கண்டு அஞ்சி பல பலவீனமான இயல்புள்ள மக்கள் இஸ்லாத்தை வெளிப்படுத்துவதை விட்டு தவிர்ந்து கொண்டனர். ஆகவே இப்போது போருக்கான நோக்கங்களில் இன்னொரு நோக்கமும் அதிகரித்து விட்டது. அது என்னவென்றால், எந்தெந்த சமுதாயத்து மக்களெல்லாம் இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டு, ஆனால் கொடுமைகளின் அச்சத்தின் காரணமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதை விட்டு விலகி இருந்தார்களோ அவ்வாறான சமுதாயங்களை நோக்கி படைபிரிவுகள் அனுப்பி வைக்கப்பட்டன. சுருக்கம் என்னவென்றால், அந்த படைப்பிரிவுகள் அனுப்பப்பட்டதன் நோக்கம், மார்க்க சுதந்திரத்தை நிலை பெறச் செய்வதாக இருந்தது. இஸ்லாம் இது சம்பந்தமாக குறிப்பாக அழுத்தம் கொடுத்துள்ளது. இந்த நோக்கத்திற்காகவும் , குறிக்கோளுக்காகவும் பெருமானார் (ஸல்) அவர்கள் ஷஅபான் மாதம், ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டில் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் தலைமையில் தூமத்துல் ஜந்தல் எனும் தொலைதூரப் பகுதியை நோக்கி ஒரு படைப் பிரிவை அனுப்பி வைத்தார்கள். ஹிஜ்ரீ நான்காம் ஆண்டு இதே பகுதிக்கு பெருமானார் (ஸல்) அவர்களும் அமைதியை நிலை நாட்டுவதற்காக சென்றிருந்தார்கள்.

இவ்வாறு இந்த பகுதி இரு வருடங்களுக்கு முன்பே இஸ்லாமிய தாக்கத்தின் கீழ் வந்து விட்டிருந்தது. அங்குள்ள குடிமக்கள் இஸ்லாமிய போதனையை கண்டு ஈர்க்கப்படாமல் இருக்கவில்லை. மாறாக, அநேகமாக அவர்களுள் ஒரு பகுதி இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டிருந்தார்கள். ஆனால், தம்முடைய தலைவர்கள் மற்றும் கோத்திரத்தார்களின் எதிர்ப்பின் காரணமாக அவர்களிடத்தில் துணிவு இருக்கவில்லை. எவ்வாறாயினும், ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டில் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் தலைமையில் பெரும், பெரும் ஸஹாபிகளைக் கொண்ட ஒரு பெரும் படையை தூமத்துல் ஜந்தலை நோக்கி அனுப்பி வைத்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் தம் நெருங்கிய ஸஹாபியான அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களைப் பார்த்து, இப்னு அவ்ஃபே! நான் உங்களை ஒரு படைப்பிரிவுக்கு அமீராக நியமித்து அனுப்ப இருக்கின்றேன். நீங்கள் ஆயத்தமாகுங்கள் என்றார்கள். ஆகவே அடுத்த நாள் காலை

நேரத்தில் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் அன்னாரின் சமூகத்தில் ஆஜரானார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் தம் கைகளால் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் தலைப்பாகையை அவர்களுக்கு அணிவித்தார்கள். ஒரு கொடியை அவர்களிடம் ஒப்படைக்குமாறு பிலால் அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் தலைமையில் ஸஹாபிகளின் ஒரு படைப் பிரிவை நியமித்து, இப்னு அவ்ஃபே! இந்த கொடியை வாங்கிக் கொள்ளுங்கள். நீங்கள் அனைவரும் இறைவழியில் ஜிஹாதுக்காக புறப்படுங்கள். காஃபிர்களுடன் போரிடுங்கள். ஆனால், ஒருபோதும் மோசடி செய்யக் கூடாது; உடன்படிக்கையை முறிக்கக் கூடாது; எதிரிகளின் சடலங்களை சிதைக்கக் கூடாது; குழந்தைகளை கொலை செய்யக் கூடாது. இது இறைவனுடைய கட்டளையாகும் ; அவனுடைய நபி உடைய வழிமுறையாகும் என்று கூறினார்கள்.

அநேகமாக இந்த அறிவிப்பில் அறிவிப்பாளர் மறதியாக பெண்களைப் பற்றிய குறிப்பை விட்டிருக்கலாம். ஏனெனில், மற்ற இடங்களில் தெளிவாக வருவது என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் எந்தவொரு படைப்பிரிவை அனுப்பினாலும், பெண்களை கொலை செய்யக் கூடாது; முதியோர்களை கொலை செய்யக் கூடாது; எவர்கள் எல்லாம் மார்க்கத் தொண்டுக்காக அர்ப்பணித்து உள்ளார்களோ அவ்வாறான மக்களை கொலை செய்யக் கூடாது என்று வலியுறுத்தி கூறுவார்கள் என்று வருகிறது.

அதற்கு பிறகு அன்னார் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களிடம், தூமத்துல் ஜந்தல் நோக்கி செல்லுமாறும், சமரசத்துடன் முடிவை அடைய முயற்சி செய்யுமாறும் கூறினார்கள். ஏனெனில், அம்மக்கள் போர் மற்றும் சண்டை ஆகியவற்றை விட்டு விட்டு கீழ்படிந்து விட்டால் இது நல்ல விஷயமாகும். அந்நிலையில் நீங்கள் அந்த மக்களுடைய தலைவரின் மகளை திருமணம் செய்யுங்கள் என்று ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்.

அதற்கு பிறகு அன்னார் (ஸல்) அந்த படைப் பிரிவை வழி அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் 700 ஸஹாபிகளுடன் தூமத்துல் ஜந்தல் -ஐ நோக்கி புறப்பட்டார்கள். அது அரேபியாவின் வடக்கில் தபூக்கில் இருந்து வடகிழக்குப் பகுதியில் சிரியாவின் எல்லைக்கருகில் இருந்தது. இந்த இஸ்லாமியப் படை தூமத்துல் ஜந்தல் எனும் இடத்தை சென்றடைந்த போது ஆரம்பத்தில் தூமத்துல் ஜந்தல் ஐச் சார்ந்த மக்கள் போருக்கு ஆயத்தமாக இருப்பதாக தென்பட்டது. அவர்கள் வாள்களை காட்டி முஸ்லிம்களுக்கு எச்சரிக்கையூட்டி வந்தார்கள். ஆனால், அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் கொஞ்சம், கொஞ்சமாக அம்மக்களுக்கு புரிய வைத்தபோது, அவர்கள் அந்த எண்ணத்தை கைவிட்டு விட்டார்கள். கொஞ்சம் நாட்களுக்குப் பிறகு அவர்களின் தலைவர் அஸ்பக் பின் அம்ர் கல்பீ என்பவர் - அவர் கிறிஸ்தவராவார். அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களின் தப்லீஃக்கினால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அத்துடனே அவருடைய சமுதாயத்தைச் சார்ந்த பல மக்களும் - அநேகமாக அவர்கள் உள்ளத்தால் இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டிருந்தார்கள். முஸ்லிம்கள் ஆகிவிட்டார்கள். எவர்கள் தம் மார்க்கத்தில் நிலை பெற்றிருக்க விரும்பினார்களோ அவர்களும் மனமுவந்து இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வருவதை ஒப்புக் கொண்டார்கள்.

எவரையும் கட்டாயப்படுத்தி ஒப்புக் கொள்ள வைக்கவில்லை. ஒப்புக் கொள்ளாத பல மக்களும் இருந்தார்கள். ஆனால் அவர்கள் ஆட்சிக்கு கட்டுப்பட்டு இருப்பதாக உறுதி மொழி வழங்கினார்கள்.

இவ்வாறு மிகவும் நல்ல முறையில் இந்த போர் நடவடிக்கை முடிவுக்கு வந்தது. பெருமானார் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் தூமத்துல் ஜந்தல் உடைய தலைவர் அஸ்பக் பின் அம்ர் கல்பீ அவர்களின் மகளான தமாஸிர் என்பவரை திருமணம் செய்து கொண்டு மதீனாவுக்கு திரும்பினார்கள். இறை அருளாலும் பெருமானார் (ஸல்) அவர்களின் கவனத்தின் அருளாலும் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்களுக்கு தமாஸிர் என்ற இதே பெண் மூலமாகத்தான் எவ்வாறான ஒரு மகன் பிறந்தார் என்றால் இஸ்லாத்தில் அர்ப்பணமானவர்களில் குறிப்பானவராக இருக்கிறார். அறிவு மற்றும் புலமை ஆகியவற்றில் எந்த அளவு தகுதி பெற்றிருந்தார் என்றால் அவர் தம் காலத்தில் இஸ்லாத்தின் தலைச்சிறந்த ஆலிம்களில் ஒருவராக கருதப்பட்டார். அவருடைய பெயர் அபூ ஸலமா ஸுஹ்ரீ என்பதாகும்.

இப்னு ஸஅது அவர்கள் அபூ ஸலமா ஸுஹ்ரீ குறித்து எழும்போது,

كَانَ ثِقَةً فَقِيهًا كَثِيرَ الْحَدِيثِ

என்று எழுதியுள்ளார்கள். அதாவது அபூ ஸலமா அவர்கள் மிகவும் நம்பிக்கைக்குரிய மார்க்கச் சட்ட அறிஞராகவும், அதிகமாக ஹதீஸ்களை அறிவிக்கக் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஸயீது பின் ஆஸ் பின் உமைய்யா அவர்கள் முதல்முறையாக முஆவியா பின் அபீ ஸுஃப்யான் சார்பாக மதீனாவின் ஆளுநராக நியமிக்கப்பட்டபோது, அவர்கள் அபூஸலமா அவர்களை மதீனாவின் காஸியாக நியமித்தார்கள். அபூ ஸலமா அவர்களின் வயதும் 72 ஆக இருந்தது. அபூ ஸலமா அவர்கள் ஹிஜ்ரீ 94-ம் ஆண்டில் மரணமடைந்தார்கள்.

பிறகு ஹஸ்ரத் அலீ பின் அபீதாலிப் போர் நடவடிக்கை குறித்தும் குறிப்பு காணப்படுகிறது. ஃபதக் என்ற இடத்தை நோக்கி அவர்கள் அனுப்பப்பட்டார்கள். இந்த போர் நடவடிக்கை ஷஅபான் மாதம் ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டில் நிகழ்ந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை 100 வீரர்களுடன் ஃபதக் என்ற இடத்தில் இருந்த பனூ ஸஅது பின் பக்ர் என்ற கோத்திரத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். ஃபதக்-ஐ குறித்து எழுதப்பட்டுள்ளதாவது; இது மதீனாவில் இருந்து ஏழு இரவு பயண தொலைவில் கைபருக்கு அருகில் இருந்த குடியிருப்பாகும். ஹிஜ்ரீ ஏழாம் ஆண்டில் கைபர் போரின் போது இப்பகுதி போரின்றி வெற்றி கொள்ளப்பட்டது. இப்போது இந்த இடம் பெரும் நகரமாக இருக்கிறது. இங்கு பேரித்தம் பழத் தோட்டங்களும், விளைநிலங்களும் அதிகமான அளவில் காணப்படுகின்றன. தற்காலத்தில் இது அல் ஹாயித் என்று அழைக்கப்படுகிறது. அப்பகுதி மக்கள் ஒரு பெரும் படையை ஒன்று திரட்டி இருப்பதாக பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்தது. அந்த எதிரிகள் கைபருடைய யூதர்களுக்கு உதவி செய்ய விரும்பினார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் இரவு நேரத்தில் பயணம் செய்தார்கள்; பகலில் மறைந்து இருப்பார்கள். இதன் விபரம் ஸீரத் காத்தமுன் நபிய்யீன் எனும் நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது; மதீனாவில் இருந்து யூத சமுதாயத்தின் மீது அவர்கள் செய்த துரோகம் மற்றும் குழப்பங்களின் காரணமாக அழிவு ஏற்பட்டிருந்தது. அது அரேபியாவில் இருந்த அனைத்து யூதர்களின் உள்ளத்திலும் ஒரு முல்லைப் போன்று குத்திக் கொண்டிருந்தது. பனூ குறைழா போருக்குப் பிறகு மதீனாவில் யூதர்கள் முடிவுக்கு வந்து விட்டனர். ஹிஜாஸிலிருந்த யூதர்களின் மிகப் பெரும் தலைமையிடமாக கைபர் குடியிருப்பு ஆகி இருந்தது. அது இஸ்லாத்திற்கு எதிராக சூழ்ச்சி செய்யும் கூடாரமாக இருந்தது. இப்பகுதியை சார்ந்த யூதர்கள் கடுமையான துவேஷம் கொண்டவர்களாகவும், பொறாமை கொண்டவர்களாகவும், அநியாயகாரர்களாகவும் இருந்தனர். இஸ்லாத்தை அழிப்பதற்காகவும் முஸ்லிம்களை அழித்தொழிப்பதற்கான முயற்சியிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

பனூ ஸஅது பின் பக்ர் என்ற கோத்திரத்திடத்திலும் கைபருடைய யூதர்களிடத்திலும் முஸ்லிம்களுக்கு எதிரான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஷஅபான் மாதம் ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு தகவல் கிடைத்தது. பனூ ஸஅது என்ற இந்த கோத்திரம் கைபர் வாசிகளுக்கு உதவி செய்வதற்காக தம் சக்திகளை திரட்டிக் கொண்டிருந்தார்கள். இந்த தகவல் கிடைத்த உடனேயே பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் தலைமையில் ஸஹாபிகளின் ஒரு படைப்பிரிவை புறப்படச் செய்தார்கள். அந்த படைப்பிரிவு பகலில் மறைந்து கொண்டு இரவில் பயணத்தை மேற்கொண்டு எதிரிகள் ஒன்று கூடி இருந்த இடத்திற்கு அருகில் ஃபதக் எனும் இடத்தை அடைந்தபோது முஸ்லிம்களுக்கு ஒரு காட்டரபி கிடைத்தான். அவன் பனூ ஸஅது உடைய ஒற்றனாக இருந்தான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனை கைது செய்தார்கள். அவனிடம் பனூ ஸஅது மற்றும் கைபர் வாசிகளின் சூழ்நிலையைப் பற்றி கேட்டார்கள். முதலிலோ அவன் தன்னை அறியாதவனாகவும், தொடர்பற்றவனாகவும் காட்டிக் கொண்டான். தனக்கு மன்னிப்பு வழங்கப்படும் என்ற வாக்குறுதியை வாங்கிக் கொண்டு இறுதியில் அவன் அனைத்து ரகசியங்களையும் கூறினான். முஸ்லிம்கள் அவனை தம் வழிகாட்டியாக ஆக்கிக் கொண்டு பனூ ஸஅது ஒன்று கூடி இருந்த இடத்தை நோக்கி முன்னேறி திடீரென்று அவர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். இந்த திடீர் தாக்குதலின் காரணமாக பனூ ஸஅது பதற்றமடைந்து மைதானத்தை விட்டு ஓடி விட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் போர்ச் செல்வங்களை எடுத்துக் கொண்டு மதீனாவுக்கு திரும்பினார்கள். இவ்வாறு இந்த ஆபத்து தற்காலிகமாக விலகி விட்டது.

பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் போர் நடவடிக்கை பற்றிய குறிப்பு வருகிறது. பனூ ஃபஸாராவுக்கு எதிராக அந்த நடவடிக்கை இருந்தது. இந்த போர் நடவடிக்கை ஹிஜ்ரீ ஆறாம் ஆண்டு நிகழ்ந்தது. பனூ ஃபஸாரா எனும் கோத்திரம் நஜதில் வாதியல் குராவில் குடியிருந்தது. வாதியல் குரா மதீனாவின் வடக்குப் பகுதியில்

சிரியா செல்லும் வழியில் திசையில் ஏறக்குறைய 350 கிலோமீட்டர் தொலைவில் இருந்தது. தபக்காத்துல் குப்ராவிலும், ஸீரத் இப்னு ஹிஷாமிலும், ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களின் தலைமையில் இந்த படைப்பிரிவு அனுப்பப்பட்டுள்ளதாக எழுதப்பட்டுள்ளது. ஆனால், பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை இந்தப் போர் நடவடிக்கை அமீராக நியமித்தார்கள் என்று ஸஹீஹ் முஸ்லிம் மற்றும் ஸுனன் அபூதாவூதில் இருந்தது தெரிய வருகின்றது. ஸஹீஹ் முஸ்லிம் (எனும் ஹதீஸ் நூலின்) அறிவிப்பில் வருகிறது:

அயாஸ் ஸலமா பின் அவ்ஃப் அவர்கள் கூறியதாவது: என்னுடைய தந்தை ஹஸ்ரத் ஸலமா பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் கூறியதாவது: நாங்கள் ஃபஸாரா குலத்தார் மீது போரிடப் புறப்பட்டோம். எங்களுக்கு அபூபக்ர் (ரலி) அவர்கள் தளபதியாக இருந்தார்கள். அவர்களை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே எங்களுக்குத் தளபதியாக நியமித்தார்கள்.

எங்களுக்கும் (ஃபஸாரா குலத்தாரின்) நீர் நிலைக்கும் இடையே ஒரு மணி நேரப் பயணத் தொலைவு இருந்த போது, இரவின் இறுதி நேரத்தில் அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்களை முகாமிடச் சொன்னார்கள். ஆகவே நாங்கள் முகாமிட்டோம்.

அதாவது அங்கு இருந்த கிணறு அல்லது தண்ணீர் இருந்த இடத்திலிருந்து ஒரு மணி நேரப் பயணத் தொலைவில்.

பின்னர் நாங்கள் நீர் இருந்த இடத்தை அடைந்தோம். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நாலாப்புறம் இருந்தும் தாக்குதல் நடத்தினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்கு சிலரை கொன்றார்கள். சிலரைச் சிறைப்பிடித்தார்கள்.

அப்போது நான் (எதிரிகளில்) ஒரு கூட்டத்தைப் பார்த்தேன். அவர்களில் பெண்களும், குழந்தைகளும் இருந்தனர். அவர்கள் என்னை முந்திக் கொண்டு (என்னிடமிருந்து தப்பி) மலைக்குச் சென்று விடுவார்களோ என்று நான் அஞ்சினேன்.

அறிவிப்பாளர் தன்னுடன் இருந்த அந்த ஸஹாபியிடம் இதை எடுத்துரைத்தவாறு கூறுகிறார்: அம்மக்கள் ஓடிச் சென்று மலையில் ஏறிவிடக் கூடாது என்றும் மறைந்து விடக் கூடாது என்றும் நான் அஞ்சினேன்.

கூறுகிறார்கள்: உடனே அவர்களுக்கும் அந்த மலைக்குமிடையே ஓர் அம்பைப் பாய்ச்சினேன்.

அதாவது, அவர்கள் அஞ்சி விட வேண்டும் என்று அம்பை எய்தேன். அந்த அம்பைப் பார்த்ததும் அவர்கள் நின்று விட்டனர். உடனே அவர்களைப் பிடித்துக் கொண்டு வந்தேன். அவர்களிடையே பனூ ஃபஸாரா குலத்தைச் சேர்ந்த பெண் ஒருத்தியும் இருந்தாள். அவளது உடலில் பழைய விரிப்பு ஒன்று இருந்தது. அவளுடன் அவளுடைய மகளும் இருந்தாள். அவள் மிகவும் அழகிய பெண் ஆக இருந்தாள். அவர்களைப் பிடித்துக் கொண்டு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தேன். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவளுடைய மகளை எனக்குக் கூடுதல் பங்காக வழங்கினார்கள். இந்நிலையில் நாங்கள் மதீனாவுக்கு வந்தோம். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவளை மக்காவாசிகளிடம் அனுப்பி வைத்தார்கள். ஏன் அனுப்பி வைத்தார்கள்? என்றால், மக்காவில் பல முஸ்லிம்கள் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களை விடுவிப்பதற்காக அப்பெண்ணை அனுப்பி வைத்தார்கள்.

இது ஸஹீஹ் முஸ்லிமுடைய அறிவிப்பாகும். இந்த போரில் எங்களுடைய முழக்கம் அதாவது, அல்லாஹ்வே! எதிரியை கொல்வாயாக! என்பதாகும்.

ஹஸ்ரத் ஸலமா பின் அக்வஃ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் அந்த நாளில் என் கைகளால் ஏழு நபர்களை கொன்றேன்.

இன்னோர் அறிவிப்பின் அடிப்படையில் 9 நபர்களைக் கொன்றதாக வருகிறது.

மற்ற விபரங்கள் இனி வரும் காலத்தில் எடுத்துக் கூறப்படும் இன்ஷா அல்லாஹ்.

இப்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துக் கூற விரும்புகிறேன். முதல் நற்குறிப்பு காதியான் தர்வேஷ் மதிப்பிற்குரிய தய்யப் அஹ்மத் ஸாஹிப் பெங்காளி அவர்களுடையதாகும். டிசம்பர் 11 அன்று 97-வது வயதில் அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

பங்களாதேஷில் இவர்கள் பிறந்தார்கள். 1942-ல் டாக்காவில் இவர்கள் முறையாக பைஅத் படிவம் நிரப்பி அஹ்மதிய்யத்தில் இணையக் கூடிய நற்பேறு பெற்றார்கள். 1945-இல் முதல் முறையாக காதியான் மாநாட்டில் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களை சந்திக்கக் கூடிய நற்பேறை பெற்றார்கள். உள்ளத்தில் காதியான் மீது எந்த அளவு நேசம் உருவானது என்றால், பிறகு தம் நாட்டுக்கு அவர்கள் திரும்பிச் செல்லவில்லை. இவர்கள் இரு வருடம் கிராம முபல்லிஃக்களுக்கான சிறப்பு வகுப்பில் கல்வி கற்ற பிறகு காதியானிலேயே இருந்து விட்டார்கள். அந்த காலகட்டத்தில் 1947 இல் நாடு பிரிக்கப்பட்டது. அவர்கள் காதியானிலேயே இருக்க விருப்பம் தெரிவித்த போது அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. தர்வேஷிய காலகட்டத்தில் பல்வேறு இடங்களில் பாதுகாப்பு பணிகளை செய்யக் கூடிய நற்பேறு கிடைத்தது. ஸதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் பல்வேறு அலுவலகங்களில் பல்வேறு தொண்டுகளை ஆற்றக் கூடிய நற்பேறு கிடைத்தது. 1955, 56-களில் ஜமாஅத்தின் பொருளாதார நிலை மிகவும் பலவீனமாக இருந்தது. எந்த தர்வேஷ்கள் வேலை செய்து தம் வருமானத்தை உருவாக்க முடியுமோ அவர்கள் ஏதேனும் வேலையை தேடிக் கொள்ள வேண்டும் ; ஏனெனில், ஜமாஅத் Allowance கொடுக்க இயலாது. தற்போது அவர்களுடைய பொருளாதார சுமையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஸதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான் அறிவிப்பு செய்தது.

இந்த வழிகாட்டலின் ஒளியில் அவர்கள் தாருல் மஸீஹுக்கு வெளியே கடைவீதியில் ஒரு தேநீர் கடையை திறந்தார்கள். பெரும்பாலும் விருந்தினர்களுக்கும் ஏழை மக்களுக்கும் இலவசமாகவே தேநீர் கொடுத்து வந்தார்கள்.

இவர்களின் திருமணம் கேரளாவைச் சார்ந்த தலாக் கொடுக்கப்பட்டிருந்த ஒரு பெண்ணுடன் நடந்தது. அவர்கள் பெயர் ஆமினா ஸாஹிபா ஆகும். அவர்களுக்கு (முதல் கணவர் மூலமாக) ஏற்கனவே ஒரு மகள் இருந்தாள். அந்த மகளை இவர்கள் வளர்த்தார்கள். மர்ஹூம் அவர்களுக்கு கொஞ்ச காலத்திற்கு முன்பு கால் மூட்டுகளில் கடுமையான வலி ஏற்பட்டது. நடமாடுவது கஷ்டமாகி விட்டது. ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என்று டாக்டர்கள் ஆலோசனை வழங்கிய போது அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக துஆ செய்தார்கள். மிகவும் மனமுருகி, உருக்கத்துடன், வேதனையுடன் துஆ செய்து வந்தார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: ஓர் இரவில் நான் கனவில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் வருகை தருவதைக் கண்டேன். பெஹஷ்தீ மக்பராவில் சில மூலிகைகளை உண்ணச் செய்தார்கள். அதற்கு பிறகு கால் மூட்டுகளில் இருந்த வலி கொஞ்சம் கொஞ்சமாக குறைந்துவிட்டது. தம்முடைய விருப்பத்திற்கு ஏற்ப அவர்கள் மீண்டும் முறையாக தொழுகைக்காக மஸ்ஜித் அக்ஸா மற்றும் மஸ்ஜித் முபாரக் வந்து போக ஆரம்பித்து விட்டார்கள். கிலாஃபத்துடன் அளவற்ற தொடர்பும், நேசமும் இருந்தது. விளையாட்டுகளின் மீதும் ஆர்வம் இருந்தது. ஆகவே இளைஞர்களுடனும் அவர்களுக்கு குறிப்பான தொடர்பு இருந்தது. இளைஞர்களை உற்சாகப்படுத்துவதற்காக விளையாட்டு மைதானங்களுக்கு சென்று வருவார்கள். இந்த வகையிலும் பிள்ளைகளுக்கு தர்பிய்யத் நடைபெற்றது.

நாடு பிரிக்கப்பட்ட போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப 313 தர்வேஷ்கள் காதியானில் குடியிருந்தார்கள். மதிப்பிற்குரிய தய்யப் அலீ ஸாஹிப் அவர்கள் அந்த தர்வேஷ்களில் இறுதியாக மரணமடைந்தது இவர்கள் ஆவார்கள். இப்பொழுது காதியானில் எந்த தர்வேஷும் இல்லை. காதியானுடைய இந்த மாநாடு எந்த ஒரு தர்வேஷும் இல்லாமல் நடக்கின்ற முதல் மாநாடு ஆகும். இன்றிலிருந்து மாநாடு ஆரம்பிக்கின்றது.

இப்போது காதியானில் இருக்கக் கூடிய புதிய தலைமுறையினரின் பொறுப்பு என்னவென்றால், தியாகங்கள் செய்து வந்த தமது சான்றோர்களின் மரபுகளை நிலைநாட்டியவாறு நன்றி உணர்வோடும், கலப்பற்றத் தன்மையோடும் காதியானில் தமது வாழ்வை கழிக்க வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கு இதற்கான நற்பேறையும் வழங்குவானாக!

அடுத்த நற்குறிப்பு, மிர்ஸா முஹம்மது தீன் நாஸ் ஸாஹிப் சாஹிப் ஸதர் ஸதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா ரப்வா, பாகிஸ்தான் அவர்களுடையதாகும். இவர்கள் மிர்ஸா அஹ்மத் தீன் ஸாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். கடந்த நாட்களில் இவர்கள் மரணமடைந்துவிட்டார்கள். إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அல்லாஹ்வின் அருளினால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். இவர்களின் குடும்பத்தில் இவர்களின் தந்தை மூலமாக அஹ்மதிய்யத் வந்தது. ஹஷ்மத்துல்லாஹ் ஸாஹிப் பட்வாரி என்பவருடைய தப்லீஃக்கினால் 1942-ல் அஹ்மதியானார்கள். முஹம்மதுதீன் ஸாஹிப் அவர்களின் நிக்காஹ் ஸய்யிது அப்துல் ஹாதி ஸாஹிப் அவர்களின் மகளான ஸய்யிதா நுஸ்ரத் ஜஹான் அவர்களுடன் நடந்தது. இவர்களுக்கு ஒரு மகன் இருந்தார். அவர் இளமைப் பருவத்தில் மரணமடைந்து விட்டார். பிறகு இவர்கள் தம் சகோதரியுடைய மகனையும், மகளையும்

நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

வளர்த்தார்கள். தம் குழந்தைகளைப் போன்று அவர்களை பராமரித்தார்கள். அந்த மகனும் நோயுற்று இருக்கிறார். அல்லாஹ் அவருக்கும் குணமளிப்பானாக!

1965-ல் இவர்கள் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர்ந்தார்கள். (அதற்கு முன்) பி.ஏ படித்திருந்தார்கள். சில காலம் வரை வெளியே வேலைகளும் செய்து வந்தார்கள். பிறகு ஜாமிஆவில் சேர்ந்தார்கள். ஜாமிஆவில் சேர்ந்து 1971 இல் ஜாமிஆவில் தேர்ச்சி பெற்ற பிறகு அங்கேயே முதல் முறையாக ஃபீல்ட் இல் நியமிக்கப்பட்டார்கள். பிறகு ஜாமிஆவின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்கள். அரபி இலக்கணம் படித்து கொடுத்தார்கள். மார்க்கச் சட்டம், வரலாறு மற்றும் சூஃபிசம் ஆகியவற்றையும் கற்றுக் கொடுத்தார்கள். ஜாமிஆவில் துணை பிரின்ஸிபல் ஆகவும் தொண்டாற்றும் நற்பேறை பெற்றிருந்தார்கள். 37 வருடங்கள் அவர்கள் ஜாமிஆவில் தொண்டாற்றும் நற்பேறைப் பெற்றுள்ளார்கள். பிறகு அடிஷனல் நாஸிர் இஷ்லாஹ் வ இர்ஷாத் தஃலீமுல் குர்ஆன் அவ் வக்ஃபே ஆர்ஸி ஆக நியமிக்கப்பட்டார்கள். பிறகு 2018 இல் சத்ர், சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவாக நியமிக்கப்பட்டார்கள். இறுதி மூச்சு வரை இந்த பொறுப்பை வகித்து வந்தார்கள். குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் அன்ஸாருல்லாஹ் ஆகியவற்றிலும் தலைமையக நீதியாக பெரும் தொண்டுகளை ஆற்றக் கூடிய நற்பேறைப் பெற்றுள்ளார்கள். அன்ஸாருல்லாஹ்வின் ஸஃபே தோம் உடைய சத்ர் ஆகவும் இருந்துள்ளார்கள். காலிது மற்றும் அன்ஸாருல்லாஹ் எனும் மாத இதழ்களின் எடிட்டர் ஆகவும் இருந்துள்ளார்கள். 1994-ல் ஏறக்குறைய ஒரு மாதம், ஒன்னே கால் மாதம் இறைவழியில் கைதாகி இருக்கும் நற்பேறையும் பெற்றுள்ளார்கள். தாருல் கஸாவில் போர்ட் உறுப்பினராகவும் தொண்டாற்றும் நற்பேறைப் பெற்றிருந்தார்கள்.

மஜ்லிஸே இஃப்தா உடைய உறுப்பினராக இருந்துள்ளார்கள். தத்ஃபீனே ஃபிக்கா கமிட்டியின் உறுப்பினராக இருந்துள்ளார்கள். அரபி போர்டு இன் சத்ர் ஆகவும் இருந்துள்ளார்கள். அரபி நன்கு அறிந்திருந்தார்கள்.

மர்ஹூம் அவர்களின் மனைவி கூறுகின்றார்கள்: இவர்களின் முழு வாழ்வின் சுருக்கம், எல்லாரிடத்திலும் அன்பு ; எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்பதாகும். அதற்கு நான் சாட்சியாக இருக்கின்றேன்.

மர்ஹூம் அவர்களின் சகோதரியின் மகன் கூறுகின்றார்: மர்ஹூம் மிர்ஸா நாஸ் ஸாஹிப் அவர்கள் இவ்வாறு என்னிடம் கூறியிருந்தார்கள்: அதாவது 10 அல்லது 12 வயதில் இருந்தே தஹஜ்ஜுத் ஐ தொழ ஆரம்பித்து விட்டார்கள் என்றும் நோய் நொடி காரணமாக இருந்தாலேயொழிய; இன்று வரை தொடர்ச்சியாக தஹஜ்ஜுத் -ஐ நிறைவேற்றி வருவதாக கூறினார்கள். அதேபோன்று 10 அல்லது 12 வயதிலிருந்து ஜமாஅத்தாக தொழுகையை தொழ ஆரம்பித்து விட்டார்கள் என்றும் இந்த பழக்கத்தின் அடிப்படையில் டாக்டர்கள் தடுத்திருந்தாலோ அல்லது ஏதேனும் நோய் ஏற்பட்டு இருந்தாலேயொழிய; பள்ளிவாசலுக்கு சென்று ஜமாஅத்தாக தொழுது வருவதாகவும் கூறினார்கள்.

மர்ஹூம் அவர்களின் மற்றோர் உறவினர் கூறுகிறார்: நான் ஒருமுறை அவர்களுடன் இரவை கழித்தேன். குளிர்காலமாக இருந்தது. இரவு நீண்டதாக இருந்தது. அப்பொழுது இரவில் மர்ஹூம் அவர்கள் எழுந்து ஏறக்குறைய 4 மணிநேரம் வரை தொடர்ச்சியாக முறையாக தஹஜ்ஜுத் தொழுவதைக் கண்டேன். குளிர்காலத்தின் நீளமான இரவுகளில் நீண்ட நேரம் தஹஜ்ஜுத் தொழ வேண்டும் என்று மர்ஹூம் கூறினார்கள்.

பிறகு மற்றொருவர் கூறுகிறார்: மர்ஹூம் அவர்கள் இவருக்கு மாமா ஆவார். இரு நஃபில்களைக் குறித்து மர்ஹூம் அவர்கள் கூறும்போது, ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் காலகட்டத்தில் ஆரம்பித்தது என்றும் பிறகு நிலையாக இன்றுவரை அதன்படி செயல்படுவதாகவும் கூறினார்கள்.

இங்கு மாநாட்டிற்கும் வருவார்கள். இங்கு சந்திக்க வரும்போது மிகவும் கலப்பற்றத் தன்மையையும், நன்றியுணர்வையும் வெளிப்படுத்தி வந்துள்ளார்கள். எப்பொழுதும் நான் அவர்களின் கண்களில் அன்பு, நேசத்தை கண்டுள்ளேன். கட்டுப்படுதலின் சிறந்த தரத்தை கண்டுள்ளேன். இங்கும் கூட அவர்கள் அழைக்கப்படும்போது என்ன நிபந்தனை இருக்கும் என்றால், நான் தொழுகைகளை இங்கு ஜமாஅத்தாக கலீஃபாவுக்குப் பின்னால் தொழ வேண்டும்; அதற்கு முன்பு என்னை நீங்கள் கொண்டு சேர்க்க முடியும் என்றால் நான் உங்களுடன் வருவேன். இல்லை என்றால் கிடையாது என்று கூறி விடுவார்கள். மர்ஹூம் அவர்களின் சகோதரர் முஷ்தாக் பேக் ஸாஹிப் இங்கு வசிக்கின்றார். அவர் கூறுகிறார்:

தந்தையுடைய விருப்பத்தின் அடிப்படையில் எனது சகோதரர் தம் வாழ்வை ஜமாஅத்துக்காக அர்ப்பணித்தார். இறுதி மூச்சு வரை அதன் உரிமையை நன்கு நிறைவேற்றினார். அவர் பி.ஏ படிப்பை முழுமை செய்தார். ஏனெனில், உயர்கல்வி கற்று தம் வாழ்வை அர்ப்பணிக்க விரும்பினார். ஜாமிஆவிலிருந்து தேர்ச்சி பெற்ற பிறகு எகிப்து நாட்டின் ஒரு யூனிவர்சிட்டி அவர்களுக்கு உயர்ந்த பதவியில் வேலை தருவதாக கூறியது. மிக நல்ல சம்பளம் தருவதாகவும் கூறியது. ஆனால், அவர்கள் அதை மறுத்து விட்டார்கள். நான் என் வாழ்வை அல்லாஹ்வின் வழியில் அர்ப்பணித்துள்ளேன் என்று கூறினார்கள். இது எப்போது நடந்த விஷயம் என்றால், முரப்பிகளுக்கு அப்போது அலோவன்ஸ் ஆக 40 ரூபாய் மட்டுமே கிடைத்து வந்தது. கஷ்டப்பட்டுதான் வாழ்க்கையை கழிக்க வேண்டியது இருந்தது.

முபஷ்ஷிர் அயாஸ் ஸாஹிப் பிரின்ஸிபல் ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வா அவர்கள் மர்ஹூம் தன் வேலையை பொறுப்புணர்வுடன் நிறைவேற்றிய ஒரு சம்பவத்தை எழுதுகிறார்கள்: எனக்கு நினைவு இருக்கிறது. நாங்கள் ஜாமிஆவில் மூன்றாம் ஆண்டோ அல்லது நான்காம் ஆண்டோ படித்துக் கொண்டிருந்தோம். மர்ஹூம் நாஸ் ஸாஹிப் அவர்கள் எங்களுக்கு அரபி பாடம் எடுத்துக் கொண்டிருந்தார்கள். அந்நாட்களில் அவர்களின் ஒரு சகோதரி நோய்வாய்ப்பட்டிருந்தார். அநேகமாக இரத்தப் புற்றுநோய் என்று நினைக்கிறேன்; ஒன்றும் செய்ய முடியாது என்று மருத்துவர்கள் கூறிவிட்டார்கள். அந்த சகோதரி மர்ஹூம் அவர்களுடன் ஜாமிஆவுக்குள்தான் தங்கி இருந்தார்கள். ஒருநாள் அவர்களுக்கு ஒரு பாட்டில் இரத்தம் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தது. மர்ஹூம் அவர்கள் அந்த ஏற்பாட்டைச் செய்த பிறகு எங்களுக்கு வகுப்பு எடுப்பதற்காக ஜாமிஆவிற்கு வந்துவிட்டார்கள். வகுப்பை தவறவிடவில்லை. அப்பொழுது சகோதரியுடைய நிலைமை மிக மோசமாக இருந்தது. பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது அவர்களின் அன்பர் ஒருவர் வந்தார். வகுப்புக்கு வெளியே நின்று கொண்டு இவரை அழைத்தார். அவர் கூறிய விஷயத்தை கேட்டு விட்டு மர்ஹூம் திரும்பி வந்து விட்டார்கள். மறுபடியும் எங்களுக்கு பாடம் நடத்த ஆரம்பித்தார்கள். எங்களுக்கு பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது அரபி கவிதை வந்தது. அதில் சோகமான கவிதை வரிகள் இருந்தன. அந்த கவிதை வரிகளை கற்றுக் கொடுக்கும் போது அவர்களின் குரல் நிரம்பிவிட்டது. கண்களில் இருந்து கண்ணீர் வழிய ஆரம்பித்தது. நாஸ் ஸாஹிப் அவர்களோ மிகவும் துணிவுள்ள மனிதராயிற்றே. அவர்களுக்கு திடீரென்று என்னவாயிற்று? என்று எங்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. எவ்வாறு இருப்பினும், மிகவும் நிதானத்துடன் முழு நேரம் பாடம் நடத்தினார்கள். வகுப்பு முடிந்த பிறகு விரைவாக தம் வீட்டை நோக்கி சென்றார்கள். எங்களுக்கு பிறகுதான் தெரிய வந்தது. அவரை சந்திக்க வந்து வகுப்புக்கு வெளியே நின்று கொண்டிருந்த அவரது அன்பர், மர்ஹூமுடைய சகோதரியின் உடல்நிலை மிக மோசமாக இருப்பதாக தகவல் கொடுக்க வந்திருந்தார். ஆனால், கடமையை நிறைவேற்றுவதற்கே முன்னுரிமை கொடுத்தார்கள். பாடம் நடத்திய பிறகே வீட்டிற்கு சென்றார்கள். கொஞ்ச நேரத்திற்கு பிறகு அவர்களின் சகோதரி மரணமடைந்து விட்டார்கள் என்று கருதுகிறேன்.

பல சிறப்பம்சங்களுக்கு சொந்தக்காரராக திகழ்ந்தார்கள். தம் வக்ஃபை நிறைவேற்றக் கூடிய உரிமையை வழங்கினார்கள். கிலாஃபத்துடன் அளவற்ற பற்றும் நன்றி உணர்வும் இருந்தது. அல்லாஹ் அவர்களுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! அந்தஸ்தை உயர்த்துவானாக!

மூன்றாவது நற்குறிப்பு மதிப்பிற்குரிய அக்முறாத் ஹைகிஃப் (Akmurat khakiev) ஸாஹிப் உடையதாகும். இவர்கள் துர்கமானிஸ்தானின் நேஷனல் சத்ராக இருந்தார்கள். கடந்த நாட்களில் இவர்களின் மரணம் நிகழ்ந்துள்ளது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூமிற்கு டாக்டர் அப்துல் அலீம் ஸாஹிப் மூலமாக ஜமாஅத் அறிமுகம் கிடைத்தது. ராவீல் புகாரியோ ஸாஹிப் மற்றும் அப்துல் அலீம் ஸாஹிப் ஆகியோரின் ஒன்றுபட்ட தப்லீஃக்கின் விளைவால் பைஅத் செய்தார்கள். ஏனெனில், உள்ளத்தால் அஹ்மதியாக இருந்தார்கள். ஆனால், பைஅத் செய்திருக்கவில்லை. 2010-ல் முதல் முறையாக மாநாட்டில் கலந்து கொண்டார்கள். இங்கு என்னை சந்தித்தார்கள். அதற்கு பிறகு உலகளாவிய பைஅத் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்கள். கலீஃபாவின் கையில் பைஅத் செய்கிறேன் என்று மகிழ்ச்சியாக இருந்தார்கள்.

இவரைப் பற்றி எழுதியவர்கள் இவ்வாறு எழுதி இருக்கிறார்கள்; பைஅத்தின் சொற்களை பின்தொடர்ந்து கூறிக்

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

கொண்டிருக்கும்போது கலப்பற்ற தன்மை, நன்றி உணர்வு மற்றும் ஈமானின் உறுதியின் காரணமாக அவர்களின் முகபாவங்கள் எவ்வாறு மாறிக் கொண்டிருந்தன? என்றால், கொஞ்ச நேரத்திற்கு முன்பு நம்முடன் சிரித்து பேசிக் கொண்டிருந்த அதே நபர்தான் இவர் என்று எனக்கு நம்பிக்கை வரவில்லை.

சில வருடங்களுக்கு முன்பு துர்கமானிஸ்தான் மொழியில் திருக்குர்ஆன் மொழியாக்க வேலையை அவர்கள் ஆரம்பித்தார்கள். கடந்த வருடம் முழுமை செய்து விட்டார்கள். கடந்த வருடம் யூ.கே ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இங்கு வந்திருந்தார்கள். கலந்து கொண்ட பிறகு இங்கு இன்னும் கூடுதல் காலம் தங்கியிருப்பதற்கு என்னிடம் அனுமதி கேட்டார்கள். என்னுடைய அனுமதிக்கு பிறகு அவர்கள் இங்கு தங்கி இருந்தார்கள். தொழுகையை பேணுவதன் பக்கம் குறிப்பான கவனம் இருந்தது. அத்துடன் அந்நாட்களில் திருக்குர்ஆன் மொழியாக்கத்தை தலைமையக ரஷ்ய டெஸ்க் இன் உதவியுடன் நூல் வடிவில் ஆயத்தம் செய்தார்கள்.

அக்முறாத் ஹைகிஃப் ஸாஹிப் அவர்கள் துர்கமானிஸ்தானுடைய முதல் அஹ்மதி மட்டுமின்றி தம் மரணம் வரை துர்கமானிஸ்தானுடைய சத்ர் ஜமாஅத் ஆக தொண்டாற்றும் நற்பேறையும் பெற்று வந்தார்கள். அவர்கள் தமது இன்டர்வியூ ஒன்றில் இவ்வாறு கூறியிருக்கிறார்கள்: தாம் பிறப்பிலேயே முஸ்லிம்; ஆனால் சம்பிரதாய முஸ்லிமாக இருந்தேன். சோவியத் யூனியன் காலகட்டமாக இருந்தது. கம்யூனிஸத்தை ஆதரிக்கக் கூடியவனாக இருந்தேன். ஆனால், குறிப்பிட்ட அளவில் இஸ்லாமிய கண்ணியம் அப்போதும் எங்களுக்குள் பாதுகாப்பாக இருந்தது. நான் ரியாஸியில் கல்வி கற்றேன். ஆனால் அடிப்படையில் நான் எப்பொழுதும் இறைவனை தேடிக் கொண்டிருந்தேன். அது எந்த இறைவன்? அல்லாஹ்வா ? அல்லது வேறு யாராவதா? என்று தேடிக் கொண்டிருந்தேன். நான் திருக்குர்ஆனுடைய சில அடிப்படையான வசனங்களை அரபியிலும் அறிந்திருந்தேன். என் தந்தையுடைய மரணத்திற்குப் பிறகு நான் ஒரு கனவு கண்டேன். ஒரு சான்றோர் மிகவும் தூய வெள்ளை உடை அணிந்திருந்தார்கள். அந்த உடை எந்த அளவு பிரகாசமாக இருந்தது என்றால், என்னால் அதை எடுத்துக் கூற இயலாது. அந்த சான்றோர் தம் ஒரு கையால் எனக்கு சைகை காட்டி தம் பக்கம் அழைத்தார்கள். அவர்கள் என்னிடம் ஒன்றும் பேசவில்லை. என்னை தன் பக்கம் அழைத்தார்கள்.

இது 2001 இல் நடந்த விஷயமாகும். அதற்குப் பிறகு ராவீல் ஸாஹிப் மற்றும் டாக்டர் அலீம் ஸாஹிப் ஆகியோரின் தப்லீஃக்கின் மூலமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் தோற்றம் பற்றி அவர்களுக்கு தெரிய வந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் புகைப்படம் காட்டப்பட்டபோது, இந்த சான்றோர் தான் என்னை தன் பக்கம் அழைத்தார்கள் என்று கூறினார்கள். இவ்வாறு அவர்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

பிறகு அவர்கள் கூறியிருப்பது போன்று 2010-ல் முறையாக வந்து பைஅத்தும் செய்தார்கள். எனக்குள் இருக்கின்ற உணர்வுகளை என் நாவால் வெளிப்படுத்த இயலாது. ஏனெனில், அஹ்மதிய்யத் எனக்கு எந்த ஒளியை தந்ததோ அதை என் நாவு எந்த அளவு வெளிப்படுத்த இயலுமோ அதை விட அதிகமாக எனதுள்ளம் அதை உணர்ந்து கொண்டிருக்கின்றது என்று கூறினார்கள்.

மிகவும் கலப்பற்ற தன்மையையும் நன்றியுணர்வையும் காட்டக் கூடியவர்களாக திகழ்ந்தார்கள்.

ஒவ்வொரு குத்பாவையும், ஒவ்வொரு சொற்பொழிவையும் எனது உள்ளத்திலும் எனது ஆன்மாவிலும் கடக்கச் செய்கிறேன்; எந்த அளவு கவனத்துடன் கேட்பேன் என்றால், அது மனனமாக ஆகிவிடும் என்று கூறியுள்ளார்கள். உலகம் எஞ்சி இருப்பதும் உலகில் சம உரிமையை ஏற்படுத்தி கொடுப்பதும் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் இணைந்துள்ளது என்று கூறிவந்தார்கள்.

இங்கு கடந்த வருடம் யூ.கே ஆண்டு மாநாட்டில் தங்கி இருப்பது அவர்களுக்கு எளிதான விஷயமாக இருக்கவில்லை. வீட்டில் திருமண நிகழ்ச்சி இருந்தது; அனைத்து உறவினர்களும் வந்திருந்தார்கள். குடும்பத் தலைவர் என்ற முறையில் நான் அங்கு இருந்திருக்க வேண்டும். ஆனால், இப்போது திருக்குர்ஆனின் துர்கமானீ மொழியாக்க பணியை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்தது எனக்கு வேறு எதுவும் கிடையாது என்று கருதுகிறேன். அனைத்தையும் விட முக்கியமான வேலை திருக்குர்ஆனுக்கு தொண்டு செய்வது ஆகும் என்று கூறினார்கள்.

அல்லாஹ் அவர்களுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! அந்தஸ்துகளை உயர்த்துவானாக! அவர்களின் பிள்ளைகள் பைஅத் செய்திருக்கவில்லை என்றால் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய அமல் செய்யக் கூடிய நல்வாய்ப்பையும் வழங்குவானாக!

தொழுகைக்குப் பிறகு இவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன்.

தமிழாக்கம்

மவ்லவி

A.P.A தாரிக் அஹ்மது

* * * * * * * *

**பிழை திருத்தம்**

கடந்த வாரம் வெளியான இதழ் எண்- 5, பக்கம் 1-ல் தலைப்பில் கடைசி வரியில் தவறுதலாக சில அச்சுப்பிழை ஏற்பட்டுவிட்டது. அதனை தயவுகூர்ந்து கீழ்கண்டவாறு திருத்தி வாசிக்கவும். ஜஸாக்குமுல்லாஹ்.

**ஸய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் யூ.கே, இஸ்லாமாபாத்தில் இருந்து "MTA" மூலமாக ஈமானை வலுவூட்டக் "கூடிய" மாநாட்டு நிறைவுரையை நிகழ்த்தினார்கள்**

* * * * * * * *

## முக்கிய அறிவிப்பு

**ஸதர் அஞ்சுமன் அஹ்மதிய்யா அஞ்சுமன் தஹ்ரீகே ஜதீத் அஞ்சுமன் வக்ஃபே ஜதீத்,கிளை அமைப்புகளின் பொருளாதார/ கேர் டேக்கர்/ காவலாளி/ சமையல்காரர்/ மஸ்ஜித் காதிம் போன்ற பணிகளில் கிரேட் நான்கு ஊழியர்களின் தேவை உள்ளது**

### நிபந்தனைகள்

(1) விண்ணப்பதாரர் 40 வயதிற்கு மேற்பட்டவராகவும்,18 வயதிற்கு குறைந்தவராகவும் இருக்கக் கூடாது.

(2) விண்ணப்பதாரருக்கு எந்தக் கல்வித் தகுதியும் கிடையாது. எனினும், படிப்பறிவு பெற்ற விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(3) இந்த அறிவிப்பிற்கு பிறகு 2 மாதத்திற்குள் கிடைக்கப் பெறுகின்ற விண்ணபங்கள் பரிசீலிக்கப்படும்.

(4) தலைமையக பணியாளர்கள் தேர்வுக் குழுவின் நேர்முகத் தேர்வில் வெற்றி பெறும் விண்ணப்பதாரர்களே தொண்டிற்காக தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(5) நேர்முகத் தேர்வு நடைபெறும் சூழலில் விண்ணப்பதாரர் காதியான் நூர் மருத்துமனையின் மூலம் பரிசோதிக்கப்படுவார். மேலும் காதியான் நூர் மருத்துவமனை போர்ட்டுக்கு ஏற்ப உடல் ஆரோக்கியமும், தகுதியும் பெற்ற விண்ணப்பதாரர் மட்டுமே தொண்டிற்கு தகுதி பெற்றவராக இருப்பார்.

(6) தேர்ந்தெடுக்கப்படும் நிலையில் விண்ணப்பதாரர் காதியானில் தமது தங்குமிடத்திற்கான ஏற்பாட்டை சுயமே செய்து கொள்ள வேண்டும்.

(7) காதியான் வந்து செல்வதற்கான செலவும், மருத்துவ பரிசோதனைக்கான செலவுகளையும் விண்ணப்பதாரரே செய்து கொள்ள வேண்டும்.

குறிப்பு: நேர்முகத்தேர்விற்கான தேதி விண்ணப்பதாரர்களுக்கு பின்னர் அறிவிக்கப்படும்.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்**
**நஸாரத் தீவான் ஸத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா காதியான்**
**அஞ்சல் எண்: 143516**
**அலைபேசி எண்: 09682627592, 09888232530,**
**அலுவலகம் எண்: 01872 - 501130**

E-mail: diwan@qadian.in

# ஜுமுஆ பேருரை

**ஸரிய்யத்துல் குர்தாஃவின் சூழல்கள் மற்றும் சம்பவங்களைக் குறித்த விரிவான விளக்கம்**

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! ஒருநேரம் இவ்வாறு இருந்தது; அதாவது அப்போது முழு உலகிலும் தங்களின் இருப்பின் மீதும், தங்களுடைய மார்க்கத்தின் மீதும், தங்களுடைய நகரத்தின் மீதும் எனக்கு கடும் பகைமை இருந்தது. ஆனால், தற்போது எனக்கு தங்களின் இருப்பும், தங்களின் மார்க்கமும், தங்களுடைய நகரமும் எல்லாவற்றையும் விட மிகவும் நேசத்திற்குரியதாக ஆகிவிட்டது ( ஹஸ்ரத் ஸுமாமஃ பின் உஸால்)

மதிப்பிற்குரிய அப்துல் லத்தீஃப் கான் ஸாஹிப் & மதிப்பிற்குரிய மன்ஸூர் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் மகன் ஷஹீத் தய்யப் அஹ்மது ஸாஹிப் & காஸா, பாலஸ்தீனைச் சேர்ந்த அன்பிற்குரிய முஹன்னத் முஅய்யத் காதியான் தர்வேஸான மவ்லவி அய்யூப் பட் ஸாஹிப்& டாக்டர் மஸூது அஹ்மது மலிக் ஸாஹிப் & மதிப்பிற்குரிய ஷபீர் அஹ்மது லூத்தீ ஸாஹிப் ஆகிய மர்ஹூம்களின் நற்குறிப்புகளும் ஜனாஸா ஹாழிர் மற்றும் காயிப் தொழுகையும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 13 டிசம்பர் 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 140**3** ஆண்டு **ஃபத்ஹ்** மாதம் **13 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி.....**

அடுத்த ஜனாஸா காதியான் தர்வேஸான மவ்லவி அய்யூப் பட் ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் கடந்த நாட்களில் 100-வது வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیْہِ رَاجِعُوْنَ

அய்யூப் பட் ஸாஹிப் தமது ஒரு வாக்குமூலத்தை இவ்வாறு எழுத வைத்துள்ளார்கள்; அதாவது, அன்னாரின் தாயார் மதிப்பிற்குரிய கரீம் பி.பி ஸாஹிபா அவர்கள் மூலமாக தமது குடும்பத்தில் அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் மீர்பூர் காஷ்மீரைச் சார்ந்தவராக இருந்தார். அன்னாரின் ஒரு சகோதரர் ஸய்யிது அர்ஷத் அலி ஸாஹிப் காதியானிலிருந்து கல்வி பயின்று சென்றிருந்தார்கள். அன்னாரின் தப்லீஃக்கின் மூலமாக தாயார் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டு விட்டார்கள். பின்னர் தந்தையாரும் பைஅத் செய்து விட்டார்கள். அய்யூப் பட் ஸாஹிப் தர்வேஷ் அவர்களுடைய எழுத்துக்கேற்ப மர்ஹூம் இளைமைப் பருவத்தில் கனவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை குதிரையில் சவாரி செய்வதாக கண்டார்கள். இந்தக் கனவின் விளக்கத்தை அன்னாரின் தாயார் இவ்வாறு கூறினார்கள்: அன்னாருக்கு அல்லாஹ் மார்க்கப் பணிகளை செய்வதற்கான நற்பேறை வழங்குவான். 1939-ல் மவ்லவி ஸாஹிப் தமது வாழ்வை மார்க்கத்திற்காக அர்ப்பணித்து விட்டார்கள். மேலும் ஜமாஅத் நிர்வாகத்தின் சார்பாக ஈரான் செல்லும்படி அன்னாருக்கு கட்டளை வழங்கப்பட்டது. அங்கு ஐந்து ஆண்டுகள் வரை மார்க்கத் தொண்டாற்றினார்கள். அதன் பிறகு காபூல், ஆஃப்கானிஸ்தான் செல்லும்படி கட்டளையிடப்பட்டது. காபூல் செல்வதற்காக குவைட்டாவில் இருந்தார்கள். அப்போது, நீங்கள் காதியானிற்கு அழைக்கப்பட்டுள்ளீர்கள் என்று அஹ்மதிய்யா ஜமாஅத் குவைட்டாவின் அமீர் ஸாஹிப் அன்னாரிடம் கூறினார்கள். நாட்டில் பிரிவினை ஏற்பட்ட காலமாக அது இருந்தது. இந்திய பாகிஸ்தான் பிரிவினை நிகழ்ந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் ஹிஜ்ரத் செய்து லாஹூரில் தங்கி இருந்தார்கள். மவ்லவி ஸாஹிப் அவர்கள் லாஹூர் சென்றடைந்த போது, காதியான் செல்வதற்கான கடைசி வாகனம் இதோ சென்று கொண்டிருக்கின்றது; இதன் பிறகு அநேகமாக எந்த வண்டியும் செல்ல முடியாமல் போகலாம்; எனவே தாங்கள் காதியான் சென்று விடுங்கள் என்று அன்னாரிடம் கூறப்பட்டது. எனவே அன்னார் காதியானிற்கு திரும்பி வந்து காதியானின் பல்வேறு இடங்களில் பாதுகாப்புப் பணிகளை செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. பின்னர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் வழிகாட்டலின் கீழ் இந்தியாவில் தப்லீஃக் இடங்களில் முஅல்லிம்கள் அனுப்பப்பட்டபோது அன்னாரும் அனுப்பப்பட்டார்கள். உத்தரபிரதேஷம் ஜான்சிக்கு அன்னார் அனுப்பப்பட்டார்கள். அங்கு அன்னார் மிக அழகிய முறையில் தப்லீஃக் செய்தார்கள். மேலும் இந்துக்களுடனும் மிக நல்ல தொடர்பு வைத்திருந்தார்கள். கூறுகின்றார்கள்: ஒருமுறை ஒரு இந்து குருஜீ நோயுற்று விட்டார். அவருடைய சீடர் ஏதாவது மருந்து கொடுங்கள் என்று மவ்லவி ஸாஹிபிடம் கூறினார். அதற்கு, காலையில் வரும்படி அன்னார் கூறினார்கள். கூறுகின்றார்கள்: நான் துஆ செய்தபோது, இரவில் கனவில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களைக் கண்டேன். அன்னார் (ரலி) தமது மருந்துப் பெட்டியை திறந்தார்கள். மேலும், இந்த மருந்தை கொடுங்கள் என்று கூறினார்கள்.

மவ்லவி ஸாஹிப் மர்ஹூம் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் காலையில் கண்விழித்த போது, அந்த மருந்துக் குப்பி எனது கைகளில் இருந்தது. பின்னர் நான் அதிலிருந்து மூன்று வேளைக்கான மருந்தை குருஜீக்கு கொடுத்து விட்டேன். மேலும் அவரும் நலம் பெற்று விட்டார்.

இந்தியாவில் பல்வேறு இடங்களில் அன்னாருக்கு தொண்டாற்றும் நற்பேறு கிடைத்துள்ளது. மேலும், இதற்கிடையிலேயே அன்னார் செயற்களத்திலிருந்து ஹோமியோபதிக்கான டிகிரியையும் பெற்றார்கள். ஏராளமான நற்பேறு பெற்ற மக்களுக்கு அன்னார் மூலமாக அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொள்வதற்கான நற்பேறு கிடைத்துள்ளது.

அன்னாரின் ஒரு மகன் டாக்டர் மஹ்மூத் அஹ்மத் ஸாஹிப் பட் அவர்களும், அன்னாரின் மனைவியும் அதாவது பட் ஸாஹிப் அவர்களின் மருமகள் டாக்டர் மன்ஜூ பட்; இவர்களும் வாழ்வை அர்ப்பணித்தவர்கள் ஆவர். அவர்கள் ஒரு நீண்ட காலம் கானாவில் தொண்டாற்றினார்கள். மேலும் இன்றைய நாட்களில் நூர் மருத்துவ மனையில் தொண்டாற்றி வருகின்றார்கள். இதேபோன்று அன்னாருடைய இரண்டாவது மகன் அமெரிக்காவில் மருத்துவராக இருக்கின்றார். அல்லாஹ் மர்ஹூம் அவர்களின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக! மேலும் அன்னாரின் பிள்ளைகள் மற்றும் சந்ததிகளுக்கும் அன்னாருடைய நன்மைகளை தொடர்வதற்கான நற்பேறை வழங்குவானாக!

அடுத்த நற்குறிப்பு, யூ.எஸ்.ஏ ஜமாஅத்தின் நாயிப் அமீர் மதிப்பிற்குரிய டாக்டர் மஸூது அஹ்மது மலிக் அவர்களுடையதாகும். இவர்களும் கடந்த நாட்களில் 86-வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰہِ وَاِنَّا اِلَیْہِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளினால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸஹாபியான ஹஸ்ரத் அல்ஹாஜ் மவ்லவி முஹம்மது அப்துல்லாஹ் ஸாஹிப் அவர்களின் கொள்ளுப் பேரன் ஆவார்கள். மேலும், மலிக் அப்துர் ரஹ்மான் ஸாஹிப் அவர்களின் மகன்வழிப் பேரர் ஆவார்கள். அல்லாஹ்வின் அருளினால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். 2000-ஆம் ஆண்டு அன்னாருக்கு ஹஜ் கடமையை நிறைவேற்றக் கூடிய நற்பேறும் கிடைத்தது. அன்னார் பாகிஸ்தானிலிருந்து கல்வியை முழுமை செய்திருந்தார்கள். பின்னர் அமெரிக்கா சென்று விட்டார்கள். அங்கிருந்து USA University of Nebraska - வில் Animal Nutrition என்ற துறையில் பி.எச்.டி செய்தார்கள். பின்னர் பல்வேறு இடங்களில் பணியாற்றி வந்தார்கள். ஜமாஅத் தொண்டை பொருத்த வரை 2013-ம் ஆண்டு முதல் மரணம் வரை நாயிப் அமீர் அமெரிக்கா ஆகவும், 1988 முதல் 2013 வரை அமெரிக்க ஜமாஅத்தின் ஜெனரல்

செகரட்டரி ஆகவும் தொண்டாற்றும் நற்பேறு பெற்றார்கள். இது மட்டுமின்றி, எந்தெந்த ஜமாஅத்துகளில் அன்னார் இருந்தார்களோ அங்கு அன்னார் ஜமாஅத் ஸத்ர் ஆகவும் இருந்துள்ளார்கள். வாஷிங்டனிலும் ஜமாஅத் சத்ர் ஆக இருந்துள்ளார்கள்.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் நூலான Revelation Rationality Knowledge and Truth தயாரிப்பிற்காக பல்வேறு அறிவியல் கட்டுரைகளிலிருந்து சான்றுகளை தேடுகின்ற பணியில் அன்னாருக்கு தமது குழுவினருடன் தொண்டாற்றும் நற்பேறும் கிடைத்துள்ளது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இதில் அன்னாரைக் கொண்டும் பணி வாங்கினார்கள். மேலும் இந்தப் பணி சில ஆண்டுக் கணக்கான காலங்களில் நீடித்திருந்தது.

அமெரிக்காவின் அமீர் ஜமாஅத் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: டாக்டர் ஸாஹிப் பல பத்தாண்டுகள் வரை அமெரிக்க ஜமாஅத்திற்கு முழுமையான தூய்மையுடனும், நன்றியுணர்வுடனும் தொண்டாற்றியுள்ளார்கள். கிலாஃபத்திற்கு முற்றிலும் கட்டுப்பட்டவராகவும், காலத்தின் கலீஃபாவின் வழிகாட்டல்களுக்கு முற்றிலும் செவிசாய்த்து எப்போதும் லெப்பைக் என்று கூறக் கூடியவராகவும், ஜமாஅத் அமைப்பைக் குறித்து அறிவு படைத்தவராகவும், அதன் முக்கியத்துவத்தை புரிந்தவராகவும் இருந்தார்கள். மேலும், நான் அன்னாரை எப்போதும் ஜமாஅத் அமைப்பை பேணியவராகவே கண்டுள்ளேன்.

அன்னாரின் துணைவியார் ஃபரீதா ஸாஹிபா கூறுகின்றார்கள்: மலிக் ஸாஹிப் தமது பெரும்பாலான நேரத்தை அதிக அதிகமாக மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதில் கழிப்பதற்கு முயற்சி செய்து வந்தார்கள்.வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் தொடர்ந்து நாள் முழுவதும் ஜெனரல் செகரட்டரி அலுவலகத்தில் பணி செய்ய வேண்டும் என்பதற்காக வாரத்தில் நான்கு நாட்கள் ஜாபில் பத்து மணிநேரம் பணி செய்து வந்தார்கள். சிலமுறை பத்து மணி நேரம் தமது ஜாபை செய்து விட்டு நேராக மஸ்ஜிதிற்கு சென்று விடுவார்கள்; மேலும் நீண்ட இரவு வரை பணியில் மும்முரமாக இருப்பார்கள். நேரத்தை சேமிக்க வேண்டும் மற்றும் ஜமாஅத் பணியை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் அலுவலகம் செல்லும்போது காலை உணவை வண்டியில் எடுத்து சென்று விடுவார்கள்.

ஜமாஅத் செல்வங்களின் பாதுகாப்பிலும், அவற்றை செலவு செய்வதிலும் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட்டு வந்தார்கள். இன்னும் கூறப்போனால், ஒரு நண்பரிடம், ஓர் ஊழியரிடம் இவ்வாறு கூறினார்கள்: ஜமாஅத்தில் (செல்வச்) செழிப்பு உருவாகி விட்டது; ஆனால், எந்த வேதனையுடன் செலவு செய்ய வேண்டுமோ அந்த வேதனையுடன் சில மக்கள் செலவு செய்வதில்லை ; தேவையற்ற செலவுகளை செய்கின்றனர். ஜமாஅத் செல்வங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற பெரும் வேதனையும் சில பழைய மக்களுக்கு இருந்தது. ஆனால், அவ்வாறு சிலமுறை பயன்படுத்தப்படுவதில்லை. இது குறித்தும் அனைத்து பொறுப்பாளர்களும் கருத்தில் கொள்ள வேண்டும்.

அன்னாரின் மகள் ஸாரா கூறுகின்றார்கள்: நான் மர்ஹூம் அவர்களை எப்போதும் ஜமாஅத் தொண்டில் மும்முரமாக ஈடுபட்டிருந்ததைக் கண்டேன். அன்னார் வீட்டில் தமது மேஜைக்கு முன்னால் ஒரு பெரிய சைன் வைத்திருந்தார்கள். அதில் இந்த வாக்கியம் இருந்தது.

WHAT HAVE I DONE TODAY IN THE SERVICE OF MY JAMA'T

உண்மையான வடிவில் ஒவ்வொரு நாளும் ஜமாஅத் சேவையில் கழிந்தது.

அன்னாருடைய சகோதரர் மலிக் முபாரக் ஸாஹிப் கூறுகின்றார்கள்: பைத்துர் ரஹ்மான் பள்ளிவாசலின் கட்டுமானம் முழுமையடைந்த பிறகு தினமும் பணியிலிருந்து நேரடியாக மஸ்ஜிதிற்கு வந்து விடுவார்கள். மேலும் இரவில் நீண்ட நேரம் வரை ஜமாஅத் பணிகளில் மும்முரமாக இருப்பார்கள். மேலும், குறிப்பாக மஜ்லிஸ் ஶூராவின் நாட்களில் இந்தப் பொறுப்புகள் மிகவும் அதிகமாகி வந்தன. பல வாரங்கள் நீண்ட நேரம் வரை ஜமாஅத் பணிகளில் கழித்து வந்தார்கள்.

அன்னாரை அறியக் கூடியவர்கள் எழுதுகின்றனர். மேலும், ஜமாஅத் அமைப்பிற்காக அன்னாரின் உள்ளத்தில் எல்லையற்ற கண்ணியமும், மரியாதையும் இருந்தது என்பதை ஏராளமான மக்கள் எழுதியுள்ளனர். தமது பிள்ளைகளிடத்திலும் ஜமாஅத்தின் மீதான அன்பை உருவாக்க அன்னார் முயற்சி செய்தார்கள். தாமும் தக்வாவின் வழிகளில் நடந்து வந்தார்கள்; மேலும் தமது பிள்ளைகளுக்கும் அறிவுரை செய்து வந்தார்கள். நெருங்கிய மற்றும் தூரத்து உறவினர்களுடனும் கருணையுடன் நடந்து கொள்வது அன்னாருடைய தனித்தன்மையாக இருந்தது. தேவையுடையவர்களுக்கு எப்போதும் உதவி செய்து வந்தார்கள்; நோயாளிகளை நலம் விசாரிப்பதற்காக முதன் முதலில் செல்வார்கள். கடின உழைப்பாளியாகவும், பணிவு மிக்கவராகவும், விருந்து உபசரிப்பு செய்யக் கூடியவராகவும்,அறிவார்ந்த திறமைகள் படைத்தவராகவும், ஒரு தூய மற்றும் நன்றியுணர்வு மிக்க மனிதராகவும் இருந்தார்கள். ஒவ்வொரு பணியையும் மிகவும் ஆழமாகவும், நுட்பமாகவும் செய்யக் கூடியவராகவும் மேலும் தமது பொறுப்புகளை புரிந்து நிறைவேற்றக் கூடியவராகவும் இருந்தார்கள். மஸ்ஜிதில் மிகவும் அதிகமான நேரத்தை செலவிடுவதற்கு முயற்சி செய்து வந்தார்கள்.


அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! மேலும் அந்தஸ்துகளை உயர்த்துவானாக! அன்னாரின் பிள்ளைகள் மற்றும் சந்ததிகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடர்வதற்கான நற்பேறை வழங்குவானாக!

அடுத்த நற்குறிப்பு மர்ஹூம் மியான் முஹம்மது ஷஃபீஃ ஸாஹிப் அவர்களுடைய மகன் மதிப்பிற்குரிய ஷபீர் அஹ்மது லூதீ ஸாஹிப் அவர்களுடையதாகும். மேலும், அன்னார் நமது ஓர் அன்பிற்குரிய ஜமாஅத் முரப்பி ஃபரக் ஷபீர் லூதீ அவர்களின் தந்தையும் ஆவார்கள். அன்னார் கடந்த நாட்களில் 62-வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّالِلّٰہِوَاِنَّاۤاِلَیۡہِرَاجِعُوۡنَ

அன்னாரின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் அன்னாரின் பாட்டனார் மியான் ஷிஹாபுதீன் ஸாஹிப் ஆஃப் லூதி நங்கல் அவர்களின் மூலமாக தோன்றியது. அன்னாருக்கு இரண்டாம் கிலாஃபத்தின் துவக்க காலத்தில் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைவதற்கு நற்பேறு கிடைத்தது. மர்ஹூம் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். மூத்த மகன் ஃபரக் ஷபீர் லூதீ அவர்கள் லைபீரியாவில் ஜமாஅத் முரப்பி ஆக இருக்கின்றார். மேலும் கடந்த பல ஆண்டுகளாக அன்னார் அங்கு தொண்டாற்றுவதற்கு நற்பேறு பெற்று வருகின்றார்கள். மேலும், செயற்களத்தில் இருந்ததன் காரணமாக தமது தந்தையின் ஜனாஸாவிலும் நல்லடக்கத்திலும் கலந்து கொள்ள முடியவில்லை.

ஜமாஅத் முரப்பி ஃபரக் ஷபீர் லூத்தி தமது தந்தையைக் குறித்து எழுதுகின்றார்கள்: அல்லாஹ்வின் அருளினால் தஹஜ்ஜுத் தொழக் கூடியவராக இருந்தார்கள். மேலும் ஐவேளை தொழுகைகளை பேணக் கூடியவராக இருந்தார்கள். இயன்ற வரை ஜமாஅத் அளவிலான தொழுகையை பேணுவதற்கு முயற்சி செய்யக் கூடியவராகவும், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கக் கூடியவராகவும், திருக்குர்ஆன் திலாவத் செய்யக் கூடியவராகவும், ஜமாஅத் நூல்களை படிக்கக் கூடியவராகவும், கிலாஃபத்துடன் எல்லையற்ற அன்பு செலுத்தக் கூடியவராகவும், முறையாக குத்பாக்களை கேட்கக் கூடியவராகவும், பொருளாதார திட்டங்களுக்கு லெப்பைக் கூறக் கூடியவராகவும், நஃபீலான நோன்புகளை ஆரோக்கியமான நிலையில் முறையாக பேணக் கூடியவராகவும், எப்போதும் ஜமாஅத் தொண்டுகளுக்கு ஆயத்தமாக இருக்கக் கூடியவராகவும், வாழ்வை அர்ப்பணித்தவர்களுடன் குறிப்பான அன்பு செலுத்தக் கூடியவராகவும், பொறுப்பாளர்களுக்கு கண்ணியம் அளிக்கக் கூடியவராகவும், ஜமாஅத் அமைப்பிற்கான தன்மானம் கொண்டவராகவும், அன்புடன் தர்பிய்யத் செய்யக் கூடியவராகவும், கஷ்டங்களில் பொறுமை மற்றும் தைரியத்தை வெளிப்படுத்தக் கூடியவராகவும், அல்லாஹ்வின் இருப்பின் மீது முழுமையான நம்பிக்கை கொள்ளக் கூடியவராகவும், தமது கஷ்டங்களை அல்லாஹ்வின் சன்னிதானத்தில் உருக்கத்துடன் எடுத்துரைக்கக் கூடியவராகவும், மற்றவர்களின் கஷ்டங்களிலும் சாத்தியமான எல்லா உதவிகளையும் செய்யக் கூடியவராகவும், எவருக்கு எதிராகவும் உள்ளத்தில் அதிருப்தியின் உணர்வுகளை கொள்ளாதவர்களாகவும், எந்தவொரு வெற்றியையும் அல்லாஹ்வின் சிறப்பான அருளாக குறிப்பிடக் கூடியவராகவும், நீதியுடன் நடக்கக் கூடியவராகவும், கருத்துக் கூறக் கூடியவராகவும், விருந்து உபசரிப்பு செய்யக் கூடியவராகவும், மனம் திறந்து பொருளாதார உதவி செய்யக் கூடியவராகவும் மர்ஹூம்


A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM



Dealers of Natural Precious & Semi-Precious Gemstones

TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com

Al-Nida GEMS
No. 1/B3, 1st Floor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com

HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com



**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த ***TOLL FREE*** எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

இருந்தார்கள். தமது ஊழியர்களுடன் நற்பண்புகளுடன் பழகக் கூடியவராகவும் இருந்தார்கள்.

இவை வெறும் மகனுடைய கூற்று மட்டும் கிடையாது; மற்ற மக்களும் இது குறித்து எழுதியுள்ளனர். நல்ல சிறந்த மனிதராக இருந்தார்கள்.

குஜ்ரன்வாலாவில் ஒரு காலத்தில் கலிமாவை அழிப்பதற்கான திட்டம் துவங்கப்பட்டிருந்தது. அப்போது, மஸ்ஜிதில் இருந்து கலிமா அழிக்கப்பட்டு வந்தது. மேலும் கலிமா எப்போதெல்லாம் அழிக்கப்படுமோ அப்போது நீங்கள் எழுத வேண்டும் என்று அன்னார் நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

ஆக, கலிமா அழிக்கப்படும்போது அன்னார் உடனடியாக சென்று மீண்டும் கலிமாவை எழுதி விடுவார்கள். மிகவும் தைரியத்துடன் அன்னார் அந்த நேரத்தில் பணி செய்தார்கள். பின்னர் இவர்கள் எழுதுகின்றார்கள்:

அன்னாரிடம் ஒரு சிறப்பான பண்பு மிக அதிகமாக வெளிப்பட்டிருந்தது. அன்னாருக்கு யார் மூலமாகவும் ஏதாவது துன்பம் ஏற்பட்டாலும் அன்னார் ஒருபோதும் அதற்கு பழிவாங்கும் விதமாக பதில் கொடுத்ததில்லை. மாறாக பொறுமை மற்றும் தைரியத்தை வெளிப்படுத்தி வந்தார்கள். மேலும் தமது விவகாரங்களை அல்லாஹ்விடம் ஒப்படைத்து வந்தார்கள். தமது துஆக்களின் மூலமாக தமது துன்பத்தை எதிர் கொண்டு வந்தார்கள்.

பள்ளிக்கூடத்தில் எங்கு அன்னார் கல்வி பயின்று வந்தார்களோ அங்கு உடன் பயின்றவர்கள் மிக அதிகமாக எதிர்த்து வந்தார்கள். இன்னும் கூறப்போனால், ஒரு மாணவரிடம் மற்ற தோழர்கள் கூறினர்: இவரை துப்பாக்கியால் சுட்டு விட்டால் நாங்கள் உனக்கு உதவி செய்வோம். எவ்வாறு இருப்பினும், அல்லாஹ் எப்போதும் பாதுகாப்பில் வைத்து வந்தான். மேலும், பெரும் துணிச்சலுடன் அங்கு பணி செய்து வந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! மேலும் அந்தஸ்துகளை உயர்த்துவானாக! அன்னாரின் பிள்ளைகளுக்கும் பாதுகாவலனாகவும், உதவியாளனாகவும் இருப்பானாக! தொழுகைக்குப் பிறகு ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். (அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், ஜனவரி 3, 2025, பக்கம் 2 - 6)

தமிழாக்கம்

மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * *

1-ம் பக்கத் தொடர்ச்சி

**ஜல்ஸா ஸாலானா அறிக்கை - 2024**

அவர்களின் மகத்துவ மிக்க உயர் அந்தஸ்து தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மேற்கோள்களையும் எடுத்துரைத்தார்கள். மேலும் கூறினார்கள்: காத்தமுன் நபிய்யீன் என்பதன் பொருள் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதி ஷரீத் நபி ஆவார்கள். மேலும், அன்னார் (ஸல்) மீது நபித்துவத்தின் சிறப்புகள் அனைத்தும் முழுமையடைந்துவிட்டன. மேலும், காத்தமுன் நபிய்யீன் என்பதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஒருபோதும் உம்மத்தீ நபி கூட வர முடியாது என்பது ஒருபோதும் பொருள் அல்ல. சொற்பொழிவாளர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கீழ்கண்ட மேற்கோளை எடுத்து வைத்து தமது சொற்பொழிவை நிறைவு செய்தார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உலக உதாரணங்களில் இருந்து நாம் கத்மே நுபுவ்வத்திற்கான உதாரணத்தை இவ்வாறு கொடுக்க முடியும். அதாவது நிலவு ஹிலால் எனும் பிறையிலிருந்து துவங்குகின்றது. மேலும் 14-ம் நாளில் சென்று அது முழுமையாக சிறப்பை அடைகின்றது. அப்போது அது பத்ர் எனும் முழு நிலவு என்றழைக்கப்படுகின்றது. இதே போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது நுபுவ்வத்தின் சிறப்புகள் முழுமையடைந்து விட்டன.

நபித்துவம் முடிந்து விட்டது என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு யூனுஸ் பின் மதா அவர்களை விடவும் முன்னுரிமை அளிக்க விரும்பவில்லையோ அவர்கள் இதன் உண்மைத்துவத்தை புரியவே இல்லை. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறப்புகள் மற்றும் மேன்மைகளைக் குறித்து எந்த அறிவுமே அவர்களுக்கு இல்லை. இந்த பலவீனமான அறிவும், குறைமதியும் கொண்டவர்களாக அவர்கள் இருந்து கொண்டு, நாம் கத்மே நுபுவ்வத்தை நிராகரிக்கின்றோம் என்று கூறுகின்றனர். நான் அப்படிப்பட்ட நோயாளிகளைக் குறித்து என்ன கூறுவது? அவர்கள் மீது வேதனைப்படுவதை தவிர்த்து நான் வேறு என்ன செய்ய முடியும்? ஒருவேளை இவர்களின் நிலை இவ்வாறாக ஆகமால் இருந்திருந்தால், மேலும் அவர்கள் இஸ்லாத்தின் உண்மைத்துவத்தில் இருந்து முற்றிலும் விலகிச் செல்லாமல் இருந்திருந்தால் பின்னர் எனது வருகைக்கு என்ன அவசியம் இருந்திருக்கும்? இந்த மக்களின் ஈமானிய நிலைகள் மிகவும் பலவீனமாகி விட்டன. மேலும், அவர்கள் இஸ்லாத்தின் பொருள் மற்றும் நோக்கத்தை முற்றிலும் அறியாதவர்கள் ஆவர். அவ்வாறில்லையென்றால் அவர்கள் உண்மையாளர்கள் மீது பகைமை கொள்வதற்கு எந்த காரணமும் இருக்க முடியாது. அந்தப் பகைமையின் விளைவானது அவர்களை நிராகரிப்பாளராக ஆக்கி விடுகின்றது. (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 228, காதியான் பதிப்பு 2003)

இந்த அமர்வின் இரண்டாவது சொற்பொழிவை மதிப்பிற்குரிய ஷேக் ஃபாத்திஹூத்தீன் ஸாஹிப் ஷாஹீது, நாயிப் அமீர் வ அடிஷனல் முபல்லிஃக் டில்லி அவர்கள் அல்லாஹ்வின் பால் மக்களை அழைப்பதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இருந்த உணர்வும், ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் அறிவுரைகளும், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பொறுப்புகளும் என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள். ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உள்ளத்தில் இஸ்லாத்தின் பிரச்சாரத்திற்காக இருந்த உணர்வைப் பற்றியும், அன்னாருக்கு இருந்த துடிப்பைக் குறித்தும் சொற்பொழிவாளர் இந்த விஷயத்தை எடுத்துரைத்தார்: 1885-ல் ஹஸ்ரத் ஸூஃபீ அஹ்மத் ஜான் ஸாஹிப் லூதியானவி (ரலி) அவர்கள் ஹஜ் பயணத்திற்காக செல்ல துவங்கினார்கள். அப்போது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் இந்த துஆவை எழுதிக் கொடுத்தார்கள்: இந்த துஆவை குறிப்பாக கஅபா மற்றும் அரஃபா மைதானத்தில் நீங்கள் கண்டிப்பாக செய்ய வேண்டும்;

கருணையாளர்களில் மிகவும் அதிகம் கருணை காட்டக் கூடியவனே! நீ எந்தப் பணியின் பிரச்சாரத்திற்காக என்னை அனுப்பி இருக்கின்றாயோ மேலும் எந்தத் தொண்டிற்காக நீ எனது உள்ளத்தில் உத்வேகத்தை வழங்கி இருக்கின்றாயோ அதனை நீ உனது அருளினாலேயே முழுமை செய்து கொடுப்பாயாக! மேலும், இந்த எளியவனின் கரங்களால் இஸ்லாத்தின் எதிரிகள் மீது சான்றுகளை முழுமை செய்வாயாக! மேலும் இதுவரை இஸ்லாத்தின் சிறப்புகளை அறியாமல் இருக்கும் அனைவரின் மீதும் சான்றுகளை முழுமை செய்வாயாக! (அஹ்மதிய்யத்தின் வரலாறு, பாகம் 2, பக்கம் 265)

ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் எனது கண்ணியத்திற்குரிய எஜமானனுக்கு இந்தக் காரணத்தினாலும் நன்றி செலுத்துகின்றேன். அதாவது அவன் இஸ்லாத்தை பரப்புவதில் ஈமானிய உத்வேகத்தை எனக்கு எந்த அளவுக்கு வழங்கி இருக்கின்றான் என்றால், அந்த வழியில் எனக்கு உயிரையும் அர்ப்பணிக்க நேர்ந்தாலும் கூட அந்த பணி எனக்கு இறையருளால் சிறிதும் கடினம் கிடையாது...... எனது முழு வாழ்வும் இதே தொண்டில் கழிய வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். மேலும் இறை மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதிலும், அதனை பரப்புவதிலும் கழிப்பதில்தான் உண்மையான மகிழ்ச்சியும், அருளுக்குரிய வாழ்வும் அமைந்திருக்கின்றது.

(ஆயினா கமாலாத்தே இஸ்லாம், ரூஹானி கஸாயின், தொகுதி 5, பக்கம் 35,)

அடுத்து அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 THU 06 FEBRUARY 2025 Issue No - 06

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

எமது அதிகாரத்தில் (இந்த விஷயம்) இருந்தால் பின்னர் நாம் யாசிப்பவர்களைப் போன்று வீடு வீடாக சென்று இறைவனின் உண்மையான மார்க்கத்தை பிரச்சாரம் செய்வோம்; மேலும், உலகில் பரவி இருக்கின்ற அழிக்கக் கூடிய இணை வைத்தல் மற்றும் நிராகரிப்பிலிருந்து மக்களை காப்பாற்றுவோம். இறைவன் எமக்கு ஆங்கில மொழி கற்றுக் கொடுத்தால் பின்னர் நாம் சுயமே சென்றும்,சுற்றுப் பயணம் செய்தும் தப்லீஃக் செய்வோம். மேலும் அந்த பிரச்சாரத்தில் வாழ்க்கையை முடித்துக் கொண்டிருப்போம்; (அந்த வழியில்) நாம் கொல்லப்பட்டாலும் சரியே!

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

நேர்வழியை பரப்புதலை முழுமை செய்கின்ற பணி தற்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எந்த நேர்வழியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு மனித குலத்திற்கும் கொண்டு வந்தார்களோ மேலும், எதனை பரப்புவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிம்மிதியிழந்து இருந்தார்களோ அதனை நிறைவு செய்வதற்கான காலம் அனைத்து வழிமுறைகளும் கிடைக்கின்ற இந்தக் காலமாகும். எவ்வாறு இந்த பணி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ அதே போன்று இந்த பணி அன்னாரை ஒப்புக் கொண்டவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாங்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுப்போம் என்று உறுதிமொழி எடுக்கின்ற அந்த மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(குத்பா ஜுமுஆ, நவம்பர் 11, 2016)

மதிப்பிற்குரிய ஹாஃபிழ் மக்தூம் ஷரீஃப் ஸாஹிப், அடிஷனல் நாஸிர் ஸாஹிப் ஆஃலா தென் இந்தியா அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வாழ்க்கை - இறைத் தூதர் (ஸல்) அவர்கள் மீது கொண்ட நேசத்தின் ஒளியில் என்ற தலைப்பில் இந்த அமர்வின் மூன்றாவது மற்றும் இறுதி சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அன்னார் திருக்குர்ஆனின் சூரா ஆலி இம்ரானுடைய 32-வது வசனத்தை ஓதினார்கள். அதன் மொழியாக்கம் இவ்வாறாகும். நீர் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வின் மீது நேசம் கொள்கின்றீர்கள் என்றால் பின்னர் என்னை பின்பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை நேசிப்பான். மேலும் உங்களது பாவங்களை மன்னிப்பான். மேலும் அல்லாஹ் மிகவும் மன்னிக்கக் கூடியவனும், மீண்டும் மீண்டும் கருணை காட்டக் கூடியவனும் ஆவான்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் கனவிலும், ஆன்மிகக் காட்சியிலும் எந்த அளவுக்கென்றால், மிகவும் விழிப்புடன் இருக்கின்ற நிலையில் தமது உண்மை பேரன்பர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை சந்தித்தார்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்களும் இந்த நபி(கள் நாயகம் அவர்களு)க்கு எப்போதும் அருள் பொழியுமாறும், சாந்தியும் சமாதானமும் கிடைக்குமாறும் பிரார்த்தனை செய்யுங்கள். (அல்அஹ்ஸாப்: 56)

அல்லாஹ்வின் இந்தக் கட்டளையின்படி செயல்பட்டவாறு ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் மீது எல்லாரையும் விட அதிகமாக தரூத் ஓதக் கூடியவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களாகவே இருந்தார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஓர் இரவில் இந்த எளியவன் எந்த அளவிற்கு அதிகமாக துரூத் ஷரீஃப் ஓதினேன் என்றால் உள்ளமும், உயிரும் அதனால் நறுமணமடைந்து விட்டது. அந்த இரவு கனவில் நான் கண்டேன்: தூய நீரின் வடிவில் ஒளியின் குவளைகளை இந்த எளியவனின் வீட்டிற்கு (மலக்குகள்) கொண்டு வருகின்றனர். அவர்களில் ஒருவர் இவ்வாறு கூறினார்: நீர் முஹம்மது (ஸல்) அவர்களின் மீது அனுப்பிய பரக்கத்துகள் இவையாகும்.
(ரூஹானீ கஸாயீன், தொகுதி 1, பக்கம் 598, பராஹீனே அஹ்மதிய்யா)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது செயல் முன்மாதிரியையும் உலகிற்கு முன்னால் எடுத்து வைத்தார்கள். ஹஸ்ரத் சவ்த்ரி குலாம் முஹம்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் காதியானிற்கு வந்தபோது, ஹஸ்ரத் ஸாஹிப் (அலை) அவர்கள் பச்சை நிற தலைப்பாகை அணிந்திருந்தார்கள். இதனைக் கண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு பச்சை நிற தலைப்பாகையுடன் என்ன தொடர்பு? என்று எனக்கு எண்ணம் ஏற்பட்டது. பின்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பச்சை நிற ஆடையை அணிந்திருந்தபோது அன்னாருக்கு அதிகம் வஹீ இறங்கி வந்தது என்று நான் மக்தூமஃ இப்னு கலாவன் என்ற நூலில் படித்திருந்தேன். (ஸீரத்துல் மஹ்தீ, அறிவிப்பு எண்: 121)

சொற்பொழிவாளர் தமது சொற்பொழிவின் இறுதியில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் கீழ் கண்ட மேற்கோளை எடுத்துரைத்து தமது சொற்பொழிவை நிறைவு செய்தார்கள்:

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

இன்று ஒவ்வோர் அஹ்மதியின் பொறுப்பாகும்; மாபெரும் பொறுப்பாகும். எவர் இக்காலத்தின் இமாமை அடையாளம் கண்டு கொண்டிருக்கின்றாரோ அவரது பொறுப்பாகும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான நேசத்தின் உணர்வால் மிக அதிகமாக தரூத் ஓத வேண்டும். மேலும் உங்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் முஸ்லிம் சமுதாயத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவானாக......... நாம் நமது துஆக்களில் முஸ்லிம் சமுதாயத்திற்கு இடமளிப்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான அன்பின் தேட்டமாகும். (குத்பா பேருரை, ஜனவரி 24, 2006) அன்னார் தமது சொற்பொழிவை நிறைவு செய்த பிறகு கண்ணியத்திற்குரிய சில விருந்தினர்கள் தமது தாக்கங்களை எடுத்துரைத்தனர். அதன் பிறகு கூட்டத்தின் தலைவர் அமர்வு நிறைவு பெற்றதாக அறிவித்தார்கள்.

**நிறைவு அமர்வு**

ஜல்ஸா காதியான் 2024-ம் ஆண்டின் நிறைவு அமர்வு (உள்ளூர் அளவில்) மதிப்பிற்குரிய மவ்லானா முஹம்மது இனாம் கௌரி ஸாஹிப் நாஸிர் ஆஃலா மற்றும் அமீர் ஜமாஅத் காதியான் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. மதிப்பிற்குரிய முர்ஷத் அஹ்மது டார் ஸாஹிப், ஆசிரியர்- ஜாமிஆ அஹ்மதிய்யா காதியான் அவர்கள் திருக்குர்ஆனின் சூரா அஸ்ஸஜ்தாவின் 31 முதல் 35 வரையிலான வசனங்களை ஓதினார்கள். இதன் பிறகு மதிப்பிற்குரிய தன்வீர் அஹ்மது நாஸிர் ஸாஹிப், நாயிப் நாஸிர் நஷ்ர் வ இஷாஅத் காதியான் அவர்கள் ஹே அஜப் மேரே குதா மேரே பே இஹ்ஸான் தேரா என்று துவங்கும் உருது கவிதைகளை அழகிய குரலில் பாடினார்கள்.

(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்)

**National Watch Company**
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad